# மார்ச் நடப்பு நிகழ்வுகள் தொகுப்பு -2018

எனதன்பு நண்பர்களுக்கு வணக்கம் , நடப்பு நிகழ்வுகள் தொகுப்பின் வழியே உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. குருப் 4 தேர்வுகள் முடிந்துவிட்டது ஆனால் அத்தேர்வின் வினாக்கள் , கட் ஆப் ஆகியவற்றை நாம் தொடர்ச்சியாக விவாதித்து வருகிறோம். சிலர் அந்த நிகழ்விலிருந்து மீழவே இல்லை ஆனால் அதற்குள் வாட்சப் பு(எ)லிகள் , பேஸ்புக் (அ)சிங்கங்கள் அடுத்த தாக்குதலை ஆரம்பித்து விட்டார்கள் குருப் 2 தேர்வில் மாற்றங்கள் கொண்டு வரப்போவதாகவும் அதனால் கடினமாக தேர்வு இருக்குமென ஆரம்பித்துவிட்டார்கள். குருப் 2 தேர்வுகளில் மாற்றம் கொண்டு வரப்பட்டால் அரசுப்பணியாளர் தேர்வாணையம் முறையாக செய்தி வெளியிடும் அதனைப் பற்றி அச்சப்பட ஒன்றுமில்லை. அடுத்த பூதமாக பள்ளிப்புத்தகங்கள் மாற இருக்கிறது எனவே அனைவரும் புதிய புத்தகம் படிக்க வேண்டும் எனவும் அப்போது தான் தேர்ச்சியடைய இயலும் எனவும் ஆரம்பித்துவிட்டார்கள். அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பாடத்திட்டமானது பள்ளிப்பாடத்தை மட்டும் அடிப்படையாக கொண்டதல்ல அது பொதுவான பாடத்திட்டத்தினை கொண்டதாகும் பள்ளிப் பாடப்புத்தகம் மாற்றப்பட்டாலும் அதில் உள்ள பொருளடக்கங்கள் பெரும்பாலும் மாறாது உதாரணமாக சிந்து சமவெளி நாகரிகத்தை எடுத்துக் கொள்ளுங்கள் அதில் சிந்து சமவெளியின் பரப்பு , கண்டுபிடித்தோர் , கலை தொடர்பான எந்த செய்திகளும் எந்தக் காலத்திலும் மாற்றமடையாது. புதிய புத்தகம் வந்தால் அதில் சிந்து சமவெளிப் பரப்பினை வங்கதேசத்தில் இருப்பதாக கூறமுடியுமா என்ன? . இன்னொரு உதாரணம் அறிவியலில் செல்லின் அமைப்பை பற்றி சமச்சீர் கல்வியில் என்ன இருக்கப்போகிறதோ அதேதான் புதிய புத்தகத்திலும் இருக்கப்போகிறது எனவே இந்த புரளியையும் அச்சத்தையும் தவிர்த்திடுங்கள்.இனி என்ன செய்ய வேண்டும்? கடந்த தேர்வுகளில் என்ன பிழைகள் செய்தீர்களோ அதே பிழையை மீண்டும் செய்யாதவாறு தயாரிப்பை மேம்படுத்துங்கள். கூடுதலான உழைப்பைக்கொடுங்கள் உங்களால் கட்டாயம் வெற்றியடைய இயலும்.

குருப் 4 தேர்வின் வினாத்தாள் வடிவமைப்பு முந்தைய தேர்வுகளிலிருந்து மாறுபட்டிருந்தது உண்மையே . மாற்றங்களுக்கு ஏற்ப நாமும் மாறிக்கொள்வதன் மூலம் தான் வெற்றியடையமுடியும். பரிணாம வளர்ச்சிக்கு ஏற்ப விலங்குகள் தங்களை தகவமைத்துக் கொண்டதால் தான் அவற்றால் தொடர்ந்து வாழ முடிந்தது எனவே நாமும் நம்பிக்கையுடன் செயல்படுவோம் வெற்றியடைவோம். தோல்வியில்லா வெற்றியில்லை!

நமது பயிற்சி மையம் இணையவழியாகவும் நேரடி வகுப்புகளின் மூலமாகவும் வகுப்புகளை வழங்கிவருகிறது. விருப்பமுடையோர் சேர்ந்து கொள்ளலாம்.

வாழ்த்துக்களுடன்

ஐயாச்சாமி முருகன்

ஐயாச்சாமி அகாதெமி, சென்னை

iyachamyacademy@gmail.com

044-48601550 ( whatsapp)

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1 | தமிழ்நாடு பட்ஜெட் |
| 2 | மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் தொகுப்பு |
| 3 | சிந்து சமவெளி நாகரிகம் |
| 4 | தமிழ்நாடு நிர்வாகம் - மத்திய அரசு நிர்வாகம் |
| 5 | கருணைக்கொலை சிறப்புக் கட்டுரை |



## ADMISSION OPEN

1. Group 1 & 2 Prelims ( Weekend Batch ) Direct Class|Online Class
2. Group 1 & 2 Mains ( Weekend Batch ) Direct Class|Online Class
3. Group 1 & 2 Prelims Test Batch ( Fresh Batch Starts From April 3rd Week)
4. Group I & 2 Mains Test Batch ( Notes Will Be Provided)

## இணையவழி வகுப்பில் சேர்வது எவ்வாறு?

நீங்கள் எங்களிடம் வகுப்பில் சேர்வதற்கான கட்டணத்தை நேரிலோ அல்லது இணையவழியாகவோ செலுத்திய பின் உங்களுக்காக தனியே பயனாளர் எண் மற்றும் குறியீடு கொடுக்கப்படும் அதனைப் பயனபடுத்தி நீங்கள் இணையதளத்தில் எப்போது வேண்டுமானாலும் வகுப்புகளை பார்க்கலாம் மேலும் லைவ் வகுப்புகளையும் பார்க்க இயலும். குறிப்புகள் வகுப்புகளைப் பொறுத்து மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். முதன்மைத் தேர்வுக்கு குறிப்புகள் அஞ்சல் வழியிலே அனுப்பப்படும்.

தொடர்புக்கு: **9952521550, 044-48601550**



# தமிழ்நாடு பட்ஜெட் 2018-2019

## தமிழ் நாட்டின் பொருளாதார நிலைமை

தமிழ்நாட்டின் மாநில மொத்த உற்பத்தியின் வளர்ச்சி விகிதம், நிலையான விலைகளின் அடிப்படையில், 2017-2018 ஆம் ஆண்டில் 8.03 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மாநிலப் பொருளாதாரத்தில் காணப்படும் இத்தகைய சாதகமான சூழ்நிலையில், முதன்மைத் துறையில் இந்த அரசு தொடர்ந்து செய்து வரும் நீடித்த முதலீடுகளாலும், மாநிலத்தில் தொழில் துறை முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளாலும், 2018-2019 ஆம் ஆண்டில் மாநிலப் பொருளாதார வளர்ச்சி விகிதம் 9 சதவீதமாக உயரும் எனக் கருதப்படுகிறது.

## முக்கிய அம்சங்கள்

- ✓ சமச்சீரான பொருளாதார மேம்பாட்டினை மாநிலம் முழுவதும் கொண்டு வருவதற்காகத் தொடங்கப்பட்ட 'மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியத்திற்கு' , 2018-2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ மாநிலத்தின் இயற்கை வளங்களைநிலைக்கத்தக்க வகையில் பயன்படுத்தி, மலைப்பகுதிகளில் வாழும் மக்களின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவு செய்வதற்காகத் டங்கப்பட்ட 'சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு' 75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ அரசு நிர்வாகத்தில் புதுமை முயற்சிகளை ஊக்கப்படுத்தும் வகையில், 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம் (TANII) தொடர்ந்து செயல்படுத்தப்படும்.
- ✓ மத்திய அரசின் உதவியைப் பெறும் வகையில், ஒருங்கிணைந்த மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் பதப்படுத்தும் பூங்காவினை கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டினத்தில் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கையினை இந்த அரசு தயாரித்து வருகிறது.
- ✓ சர்வதேச அளவில் தமிழ்மொழி மற்றும் பண்பாட்டைப் பாதுகாத்துப் பரப்புவதற்காக, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி விரிவாக்க மையம் ஒன்று உருவாக்கப்படும்
- ✓ முதலமைச்சரின் காவலர் விருதுகளின் எண்ணிக்கை, 2018-2019 ஆண்டு முதல் 1,500-ல் இருந்து 3,000 ஆக உயர்த்தப்படும்
- ✓ மக்கள் தங்களுக்குத் தொடர்பான தரவுத் தகவல்களைத் தாங்களே திருத்தம் செய்ய ஏதுவாக, ஒருங்கிணைந்த 'தமிழ்நாடு மக்கள் இணையதளம்' (Tamil Nadu Makkal Portal) விரைவில் தொடங்கப்படும்.
- ✓ திண்டிவனம் அருகில்பெலாக்குப்பம் என்ற கிராமத்தில், சுமார் 450 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய உணவு பதப்படுத்தும் பூங்கா (Ultra Mega Food Park) அமைக்கப்படும்.
- ✓ விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் 'உழவன்' என்ற அலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்படும்.

- ✓ கிண்டியில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'அம்மா பசுமைப் பூங்கா' புதிதாக அமைக்கப்படும்.
- ✓ கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் மலர்களுக்கான வணிக வளாகம் புதிதாக அமைக்கப்படும்.
- ✓ கடலூர் மாவட்டம், மங்களூரில் மக்காச்சோளம் பதப்படுத்தும் அலகு ஒன்று அமைக்கப்படும்.
- ✓ ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் 12,301 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவிருக்கும் சென்னை சுற்றுவட்டச் சாலை திட்டத்தின் திருத்திய விரிவான திட்ட அறிக்கைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன்,1,593 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'பசுமை ஆற்றல் மின்தொடர் திட்டத்தை' அரசு செயல்படுத்தி வருகிறது.
- ✓ ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்ட 'தமிழ்நாடு சுற்றுலா உட்கட்டமைப்பு மேம்பாட்டு முதலீட்டுத் திட்டத்தின்' முதல் கட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- ✓ மாநிலத் தலைமையிடத்தை மாவட்டத் தலைமையிடங்களுடனும், வட்டாரத் தலைமையிடங்களுடனும் கண்ணாடி இழை வட வலையமைப்பு மூலமாக இணைக்க, அரசுத் துறை–தனியார் துறை பங்களிப்புடன் தமிழ் நெட் திட்டம் செயல்படுத்தப்படும்.
- ✓ தொழில் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம் வடகாலில் வானூர்திப் பூங்கா, கோயம்புத்தூரில் டைசல் உயிர்ப் பூங்கா, பொன்னேரியில் பிளாஸ்டிக் தொழிற்பூங்கா மற்றும் செங்கல்பட்டில் மருத்துவப் பூங்கா அமைக்க சிறப்பு முயற்சிகளை இந்த அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.
- ✓ நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்குத் தொகையினை வழங்கி, அம்ருத் திட்டத்தினைச் செயல்படுத்திட, 4,790 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் 'தமிழ்நாடு நகர்ப்புர முன்னோடி முதலீட்டுத் திட்டத்தினை' ((Tamil Nadu Urban Flagship Investment Programme) மாநில அரசு செயல்படுத்தும்.
- ✓ பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் (Infant Mortality Rate), 2016 ஆம் ஆண்டில் 17 ஆகக் குறைக்கப்பட்டு, நாட்டிலேயே இரண்டாவது இடத்தை மாநிலம் பெற்றுள்ளது. தேசிய மகப்பேறு இறப்பு விகித இலக்கு ((MMR target) ஒரு இலட்சம் குழந்தைப் பிறப்புகளுக்கு 109 இறப்புகள் என்ற அளவில் உள்ள நிலையில், நமது மாநிலக் கணக்கெடுப்பின் படி, 2016-2017 ஆம் ஆண்டில் 62 என்ற குறைந்த அளவை தமிழ்நாடு ஏற்கனவே எட்டியுள்ளது. மேலும், 99 சதவீத குழந்தை பிறப்புகள் மருத்துவ நிலையங்களில் நிகழும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.
- ✓ 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்' கீழ், ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த 12,000 ரூபாய் நிதியுதவியை 18,000 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. கர்ப்பிணிப் பெண்களுக்கு பரவலாக உள்ள இரத்த சோகையைப் போக்கவும், பிறக்கும் குழந்தைகளின் எடையளவை உயர்த்தவும் இத்திட்ட நிதியில் 4,000 ரூபாய் மதிப்புள்ள இரும்புச்சத்து டானிக்

மற்றும் ஊட்டச்சத்துப் பொருட்கள் அடங்கிய 'அம்மா தாய்சேய் நல ஊட்டச்சத்துப் பெட்டகம்' வழங்கப்படும்.

- ✓ உயர்கல்வியில் 46.90 சதவீத மொத்தச் சேர்க்கை விகிதத்தை எட்டி, நாட்டிலேயே முதன்மை மாநிலம் என்ற நிலையை தமிழ்நாடு அடைந்துள்ளது
- ✓ 2016 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் சட்டத்தின்படி, மாநில அளவில் மாற்றுத் திறனாளிகளுக்கான நிதியம் 10 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் உருவாக்கப்படும்.
- ✓ நிதி ஆயோக் வெளியிட்டுள்ள மாநிலங்களுக்கிடையேயான சுகாதாரக் குறியீடுகளில் இந்தியாவிலேயே தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது;

- **The Prime Minister, Shri Narendra Modi, chaired his twenty-fourth interaction through PRAGATI - the ICT-based, multi-modal platform for Pro-Active Governance and Timely Implementation.**
- முனைப்பான ஆளுகை மற்றும் அரசு திட்டங்களை குறித்த காலத்தில் நிறைவேற்றி முடிக்கவும் வகை செய்யும் பிரகதி திட்டத்தின் 24 ஆவது கலந்துரையாடல் கூட்டம் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்றது.
- **The Union Cabinet chaired by the Prime Minister Shri Narendra Modi has approved the proposal for signing of a Memorandum of Understanding (MoU) between India and Jordan on Cooperation in the Field of Manpower.**
  மத்திய அமைச்சரவை இந்தியா மற்றும் ஜோர்டன் இடையே மனிதவளம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- **Cabinet today approved Trafficking of Persons (Prevention, Protection and Rehabilitation) Bill, 2018 for introduction in Parliament.**
  ஆள் கடத்தல் சட்டம் -2018ன் (தடுப்பு, பாதுகாப்பு, மறுவாழ்வு) முன்வடிவு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- **To implement and moniter the National food Security act 2013 , Tamilnadu government appointed a special committee under the chairmanship of former Civil Servant R. Vasuki**
  தமிழகத்தில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தை செயல்படுத்தவும், அதனை கண்காணிக்கவும் மாநில அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ்., அதிகாரி ஆர்.வாசுகி நியமிக்கப்பட்டுள்ளார்.
- **Roger Federer became the most decorated winner in the history of Laureus World Sports Awards after he won twin honours at the 18th edition of the prestigious awards ceremony.**
- ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான மொனாக்கோவில் 18-ஆவது லௌரியஸ் உலக விளையாட்டு விருது வழங்கும் விழா நடைபெற்றது. இதில் '2017-ஆம் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர்', 'சிறந்த மீண்டு வந்த வீரர்' ஆகிய இரு விருதுகளை ஃபெடரர் வென்றார்
- **Japan unveiled its long-awaited mascot for the 2020 Olympic Games. Mascot designed by Ryo Taniguchi**

- **2020** ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிக்கான இலச்சினையை ஜப்பான் வெளியிட்டுள்ளது. இதனை வடிவமைத்தவர். ரியோ டனிகுசி
- **World Rare Disease Day' February 28** - உலக அறியவகை நோய்கள் தினம் பிப்ரவரி **28**

## ஆள் கடத்தல் சட்டம் -2018ன் சட்ட முன்வடிவில் உள்ள அம்சங்கள்:

1. இந்த சட்ட முன்வடிவு ஆள் கடத்தப்படுவதைத் தடுப்பது, கடத்தப்பட்டோரை மீட்பது, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது ஆகிய நோக்கங்களுடன் கொண்டு வரப்படுகிறது.

2. கொத்தடிமை, பிச்சையெடுப்பது, பாலியல் நோக்கில் ரசாயனம், மருந்துகளை பெண்கள் உடலில் செலுத்துதல், திருமணம் செய்வதாகக் கூறியும், திருமணம் செய்தவர்களையும், கடத்திச் சென்று கட்டாயத் திருமணம் செய்து கொள்வது.

3. ஒரு நபரைக் கடத்துவது, அதற்கு வசதி செய்வது, போலியாக சான்றிதழ்களைத் தயாரித்தோ அல்லது ஏற்கெனவே இருக்கும் சான்றிதழில் மோசடியாகத் திருத்தியோ அச்சடித்து, அதைப் பயன்படுத்துவது, அதை அரசிடம் காட்டுவது, ஒப்புதலைப் பெறுவதற்கு மோசடியான செயல்களைச் செய்தல், அதற்காகப் போலி ஆவணங்களைத் தயாரித்தல்.

4. கடத்தலால் பாதிக்கப்பட்டோர், அதற்குச் சாட்சி அளிப்போர், புகார் தருவோர் குறித்து தகவல்களை வெளியிடாது இருத்தல், பாதிக்கப்பட்டோரிடம் அறிக்கை பெறுவதில் வீடியோ கான்பரன்சிங் முறையை கடைப்பிடித்தல். (இது, எல்லை தாண்டிய சம்பவங்களையும், மாநிலங்களுக்கு இடையிலான கடத்தல் குற்றங்களையும் விசாரிக்க உதவும்)

5. காலக் கெடுவுடன் கூடிய நீதி விசாரணை, பாதிக்கப்பட்டோர் ஓராண்டு காலத்துக்குள் பாதுகாப்பாக நாடு திரும்ப உதவுதல்.

6. பாதிப்புக்கு ஆளானோர் மீட்கப்பட்டவுடன் பாதுகாப்புடன் வைத்திருத்தல், மறுவாழ்வு அளித்தல். அவர்கள் உடல் ரீதியிலும், மன ரீதியிலும் பாதிக்கப்பட்டதற்கு உதவுவதற்காக அவர்களுக்கு 30 நாட்களுக்குள் இடைக்கால நிவாரணம் அளித்து உதவுதல். இது தொடர்பாக குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தவுடன் அவர்களுக்கு உரிய நிவாரணத் உதவியை 60 நாட்களுக்குள் அளித்தல்.

7. குற்றவாளியிடம் விசாரணை நடைபெற்றாலும், அதன் முடிவு எவ்வாறாக இருந்தாலும், பாதிக்கப்பட்டோருக்கு உரிய மறுவாழ்வு அளிப்பதற்குக் கட்டுப்பாடு ஏதுமில்லை.

**மறுவாழ்வு நிதி**

8. பாதிக்கப்பட்டோரின் உடல்நிலை, மனநிலை, சமூகத்தில் மதிப்பை நிலைநாட்டுதல் ஆகியவற்றை மீட்டெடுக்க மறுவாழ்வு நிதியை உருவாக்குதல். கல்வி, தொழில், திறன் மேம்பாடு, உடல் நலம், மன நல ஆதரவு, சட்டப்பூர்வ உதவி, பாதுகாப்பான தங்குமிடம் அளித்தல் ஆகியவற்றுக்கு இது உதவக் கூடும்.

9. கடத்தல் குற்றங்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் இதற்கென சிறப்பு நீதிமன்றங்களை அமைத்தல்.

10. இந்த சட்ட முன்வடிவு மாவட்ட, மாநில, தேசிய அளவில் அர்ப்பணிப்புடன் கூடிய அமைப்புகள், நிறுவனங்களை அமைக்கத் துணைபுரியும். கடத்தலைத் தடுப்பது, பாதிக்கப்பட்டோரைக் காப்பது, புலன் விசாரணை நடத்துவது, மறுவாழ்வுப் பணிகள் உள்ளிட்டவற்றுக்கு இந்த அமைப்புகளும் நிறுவனங்களும் பொறுப்பேற்க வேண்டும். தற்போது உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள கடத்தல் தடுப்புப் பிரிவின் (National Anti-Trafficking Bureau) பணிகளைத் தேசிய புலனாய்வு ஏஜென்சி (NIA) தேசிய அளவில் மேற்கொள்ளும்.

11. இக்குற்றத்துக்கு குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் முதல் ஆயுள் சிறை தண்டனை வரை தண்டனை விதிக்கப்படும். அத்துடன் ரூ. 1 லட்சத்துக்குக் குறையாத அபராதம் விதிக்கப்படும்.

12. இந்தக் குற்றத்தைப் பொறுத்தவரையில் தேசிய அளவிலும் உள்நாட்டிலும் இருக்கும் திட்டமிட்ட சதிவலையை முறியடிக்க குற்றத்துடன் தொடர்புள்ளவர்களின் சொத்துகளை முடக்குவது, பறிமுதல் செய்வது, உள்ளிட்ட கடும் நடவடிக்கைளை மேற்கொள்ளவும் இந்த சட்ட முன்வடிவு வழிவகுக்கும்.

13. இந்த உத்தேச சட்டமுன்வடிவு நாடு விட்டு நாடு நடத்தப்படும் கடத்தல் குற்றங்களையும் ஒடுக்க ஒருங்கிணைந்து செயல்பட வகை செய்யும். இதில், வெளிநாட்டு அமைப்புகளுடன் இணைந்தும், சர்வதேச புலனாய்வில் உதவியும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்தும், இந்த தேசிய கடத்தல் தடுப்புப் பிரிவு (National Anti-Trafficking Bureau) செயல்படும். இக்குற்றம் தொடர்பாக புலன் விசாரணை, நீதி விசாரணை ஆகியவற்றை விரைவுபடுத்துவதற்காக ஆதாரங்கள், அது தொடர்பான பொருட்கள், சாட்சியங்களை எல்லை கடந்தும் பகிர்ந்து கொள்ளவும் இந்த மசோதா வழியமைக்கும்.

**பின்னணி**:

ஆள் கடத்தல் என்பது மனித உரிமைகளை மீறும் சம்பவங்களில் உலக அளவில் மூன்றாவது மிகப் பெரிய குற்றமாகும். இந்தக் குற்றத்தைக் கையாண்டு தடுக்க உரிய சட்டம் இதுவரை இல்லை. அதனால், ஆள் கடத்தல் (தடுப்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு) சட்ட முன்வடிவு (2018) கொண்டுவரப்படுகிறது. இந்த சட்டமுன்வடிவு மிகவும் பரவலாகவும், கண்ணுக்குத் தெரியாமலும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் நடக்கும் ஆள் கடத்தல், குறிப்பாக பெண்களையும் குழந்தைகளையும் கடத்தும் குற்றத்தைத் தடுக்கப் பெரிதும் வகை செய்யும்.

இந்தச் சட்டம் கொண்வரப்படும்போது, தெற்காசிய நாடுகளிலேயே இந்தியா ஆள்கடத்தலைத் தடுப்பதில் தலைமைப் பண்பு கொண்ட நாடாகத் திகழும். ஆள் கடத்தல் உலகுக்கே கவலை தருவதாகும். அதிலும் தெற்காசிய நாடுகள் அதிகம் பாதிக்கப்படுகின்றன. அவற்றில், தற்போது இந்தியா ஒருங்கிணைந்த சட்டத்தைக் கொண்டுவருவதன் மூலம் முன்னோடியாகத் திகழ்கிறது.

இந்தச் சட்டத்தை இந்தியா செயல்படுத்துவதை ஐநா போதைப் பொருள் கடத்தல் குற்றத் தடுப்பு அலுவலகம் (UNODC), தெற்காசிய மண்டல ஒத்துழைப்பு நாடுகள் அமைப்பு (SAARC) ஆவலுடன் எதிர்பார்க்கின்றன.

இந்த சட்ட முன்வடிவு பல்வேறு அமைச்சகங்கள், துறைகள், மாநில அரசுகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பல்வேறு வல்லுநர்களைக் கலந்தாலோசித்து வடிவமைக்கப்பட்டுள்ளது. மகளிர், இது

தொடர்பாக குழந்தைகள் நல அமைச்சகத்துக்கு ஏராளமான ஆலோசனைகள் வரப்பெற்றன. அவையெல்லாம் இந்த சட்டமுன்வடிவில் சேர்க்கப்பட்டுள்ளன. வரைவு மசோதா தில்லி, கோல்கத்தா, சென்னை, மும்பை ஆகிய நகரங்களைச் சேர்ந்த 60 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உள்பட பல தரப்பினருடன் கலந்து ஆலோசித்த பிறகு வரைவு மசோதா வடிவமைக்கப்பட்டுள்ளது. பல அமைச்சர்களிடையில் இந்த மசோதா குறித்து ஆய்வு நடத்தியும் விவாதிக்கப்பட்டது.

## Trafficking of Persons (Prevention, Protection and Rehabilitation) Bill, 2018 features:-

1. Addresses the issue of trafficking from the point of view of prevention, rescue and rehabilitation.
2. Aggravated forms of trafficking, which includes trafficking for the purpose of forced labour, begging, trafficking by administering chemical substance or hormones on a personfor the purpose of early sexual maturity, trafficking of a woman or child for the purpose of marriage or under the pretext of marriage or after marriage etc.
3. Punishment for promoting or facilitating trafficking of person which includesproducing, printing, issuing or distributing unissued, tampered or fake certificates, registration or stickers as proof of compliance with Government requirements; orcommits fraudfor procuring or facilitating the acquisition ofclearances and necessary documents from Government agencies.
4. The confidentiality ofvictims/ witnesses and complainants by not disclosing their identity. Further the confidentiality of the victims is maintained by recordingtheir statement through video conferencing (this also helps in trans-border and inter-State crimes).
5. Time bound trial and repatriation of the victims - within a period of one year from taking into cognizance.
6. Immediate protection of rescued victims and their rehabilitation. The Victims are entitled to interim relief immediately within 30 days to address their physical, mental trauma etc. and further appropriate relief within 60 days from the date of filing of charge sheet.
7. Rehabilitation of the victim which is not contingent upon criminal proceedings being initiated against the accused or the outcome thereof.
8. Rehabilitation Fund created for the first time. To be used for the physical, psychological and social well-being of the victim including education, skill

development, health care/psychological support, legal aid, safe accommodation,etc.

9. Designated courts in each district for the speedy trial of the cases.

10. The Bill creates dedicated institutional mechanisms at District, State and CentralLevel. These will be responsible for prevention, protection, investigation and rehabilitation work related to trafficking. National Investigation Agency (NIA) will perform the tasks of Anti-Trafficking Bureau at the national level present under theMHA.

11. Punishment ranges from rigorous minimum 10 years to life and fine not less than Rs. 1 lakh.

12. In order to break the organized nexus, both at the national and international level, the Bill provides for the attachment & forfeiture of property and also theproceeds for crime.

13. The Bill comprehensively addresses the transnational nature of the crime. The National Anti-Trafficking Bureau will perform the functions of international coordination with authorities in foreign countries and international organizations; international assistance in investigation; facilitate inter-State and trans-border transfer of evidence and materials, witnesses and others for expeditingprosecution; facilitate inter-state and international video conferencing in judicial proceedings etc.

**Background:**

Trafficking in human beings is the third largest organized crime violating basic human rights. There is.no specific law so far to deal with this crime. Accordingly, the Trafficking of Persons (Prevention, Protection and Rehabilitation) Bill, 2018 has been prepared. The Bill addresses one of the most pervasive yet invisible crimes affecting the most vulnerable persons especially women and children.

The new law will make India a leader among South Asian countries to combat trafficking. Trafficking is a global concern also affecting a number of South Asian nations. Amongst them, India is now a pioneer in formulating a comprehensive legislation. UNODC and SAARC nations are looking forward to India to take lead by enacting this law.

The Bill has been prepared in consultation with line Ministries, Departments, State Governments, NGOs and domain experts. A large number of suggestions received by the Ministry of WCD in hundreds of petitions have been incorporated in the Bill. The Draft Bill discussedin regional consultations held in Delhi, Kolkata, Chennai and Bombay with various stakeholdersincluding over 60 NGOs. The Bill was examined and discussed by Group bf Ministers also.

- **The Western Naval Command of the Indian Navy concluded a large scale operational exercise in the Arabian Sea. The three week long exercise termed Exercise 'Paschim Leher' (XPL), tested the operational readiness of the Western Naval Command and the execution of it's operational plans.**

அரபிக்கடலில் இந்திய கப்பற்படையின் மேற்கத்திய பிரிவு மேற்கொண்ட மிகப்பெரிய போர் நடவடிக்கை பயிற்சி நிறைவடைந்தது. 'மேற்கு அலை' என்று பொருள்படும் பஸ்ச்சிம் லெஹர் (எக்ஸ்பிஎல்-18) எனப் பெயரிடப்பட்டிருந்த மூன்றுவாரகால இந்த போர் பயிற்சி மேற்கத்திய கப்பற்படை பிரிவின் போர் ஆயத்த நிலையையும் போர்த்திட்டங்களை அது செயல்படுத்தும் முறையையும் சோதித்தது.

- **Cabinet approves Establishment of National Financial Reporting Authority . The decision aims at establishment of NFRA as an independent regulator for the auditing profession which is one of the key changes brought in by the Companies Act, 2013.**

தேசிய நிதி நடவடிக்கைகள் ஆணையத்தை (NFRA) அமைக்கவும் இதற்கு ஒரு தலைவர் பதவி, 3 முழுநேர உறுப்பினர் பதவிகள் ஒரு செயலாளர் பதவி ஆகியவற்றை உருவாக்குவதற்குமான முன்மொழிவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. கணக்குத் தணிக்கை தொழிலை முறைப்படுத்தும் சுதந்திரமான அமைப்பை நோக்கமாகக் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டது. 2013-ம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் மூலம் முக்கியமான மாற்றங்களை கொண்டு வருவதில் ஒன்றாக இது இருக்கும்.

- **Leader of the Congress in the Lok Sabha Mallikarjun Kharge declines offer to attend Lokpal meeting as special invitee . Lokpal Act 2013 which came into force on January 16 2014.**

லோக்பால் அமைப்பின் தேர்வுக் குழுக் கூட்டத்தில் பங்கேற்க சிறப்பு அழைப்பாளராக காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவைத் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கேவுக்கு மத்தியஅரசு அழைப்புவிடுத்து இருந்தது. ஆனால், அந்த அழைப்பை அவர் நிராகரித்தார். லோக்பால் சட்டம் 2013 , ஜனவரி 16லிருந்து செயல்பாட்டிற்கு வந்தது. லோக்பால் சட்டம் ஜனவரி 16,2014 முதல் நடைமுறைக்கு வந்தது.

கூடுதல் தகவல்கள்

**The Selection Committee has as members the Lok Sabha Speaker, Leader of Opposition in the Lok Sabha, the Chief Justice of India or a judge of the apex court nominated by him, and an eminent jurist who could be nominated by the President or any other member**

லோக்பால் சட்டப்படி அந்த அமைப்பின் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரைத் தேர்வு செய்யும் குழுவில் பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், மக்களவைத் தலைவர், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அல்லது அவரால் பரிந்துரைக்கப்படும் ஒரு நீதிபதி ஆகியோர் இடம்பெற வேண்டும்.

- **Tamilnadu CM started toll 14417 free for Students and parents to provide , Employment and Career guidance and other services. It's a first kind in India.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி பள்ளிக் கல்வித் துறை சார்பில் இந்தியாவிலேயே முதன்முறையாக மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் தேவையான கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் இதர கல்வி சார்ந்த துறைகளின் தகவல்கள், தெளிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் பெறுவதற்காக கட்டணமில்லா தொலைபேசி எண் 14417 வழியாக தொடர்பு கொள்ளும் 24 மணிநேர கல்வி வழிகாட்டி உதவி மைய சேவையை துவக்கி வைத்தார்கள்.

- **Tamilnadu will get greewnways approved by Union Government , Chennai to salem, Madurai to Thanushkodi ,Melur to Tanjore, kottampatti to Karaikudi.**

இந்தியாவிலே 2-வது பசுமை சாலை திட்டத்தை தமிழகத்துக்கு மத்திய அரசு வழங்கியுள்ளது.இதில் சென்னை முதல் சேலம், மதுரை முதல் தனுஷ்கோடி, மேலூர் முதல் தஞ்சாவூர், கொட்டாம்பட்டி முதல் காரைக்குடி

- **Jordan** is a sovereign Arab state in western Asia Capital is Amman, ஜோர்டன் நாடு மேற்காசியாவில் அமைந்துள்ளது அதன் தலை நகரம் அம்மான்.

இந்தியா ஜோர்டன் இடையேயான ஒப்பந்தங்கள்

- பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம்
- ராஜீய மற்றும் அதிகாரப்பூர்வ பாஸ்போர்ட் வைத்திருப்பவர்களுக்கு வீசா விலக்கு அளித்தல்
- கலை நிகழ்ச்சிகள் பரிவர்த்தனை
- மனித ஆற்றல் ஒத்துழைப்பு உடன்பாடு
- சுகாதாரம் மற்றும் மருத்துவ துறைகளில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்
- அடுத்த தலைமுறை மீச்சிறப்பு மையத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்
- பாறை பாஸ்பேட் மற்றும் உரம் - என்பிகே ஆகியவற்றை வழங்குவதற்கான நீண்டகால புரிந்துணர்வு ஒப்பந்தம்
- சுங்கத்துறையில் பரஸ்பர உதவி உடன்பாடு

- ஆக்ராவுக்கும் பெட்ராவுக்கும் (ஜோர்டான்) இடையிலான (பிணைப்பு) நகர உடன்பாடு
- இந்தியாவின் வெகுஜன தகவல் தொடர்பு நிறுவனத்துக்கும் ஜோர்டான் ஊடக நிறுவனத்துக்கும் இடையே ஒத்துழைப்பு
- ஜோர்டான் பல்கலைக்கழகத்தில் இந்தி மொழி இருக்கை ஒன்றை அமைப்பதற்கு அப்பல்கலைக்கழகத்திற்கும் இந்திய பண்பாட்டு உறவுகள் சபைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

**India -Jordan Agreement**

- **MoU on Defence Cooperation**
- **Visa waiver for diplomatic and official passport holders**
- **Cultural Exchange Programme (CEP)**
- **Manpower Cooperation Agreement**
- **MoU for cooperation in the field of Health and Medicine between India and Jordan**
- **MoU for setting up of the next generation Centre of Excellence (COE) in Jordan**
- **MoU for long term supply of Rock Phosphate and Fertilizer/NPK**
- **Customs Mutual Assistance Agreement**
- **Twining Agreement between Agra and Petra (Jordan)**
- **Cooperation between Indian Institute of Mass Communication (IIMC) and Jordan Media Institute (JMI)**
- **MoU between PrasarBharati and Jordan TV**
- **MoU between University of Jordan (UJ) and ICCR regarding setting up of a Hindi Chair at the University.**

- **INSV Tarini entered Cape Town (South Africa) today during it's maiden voyage to circumnavigate the globe. This is the first-ever Indian circumnavigation of the globe by an all-women crew. The vessel is skippered by Lieutenant Commander Vartika Joshi, and the crew comprises Lieutenant Commanders Pratibha Jamwal, P Swathi, and Lieutenants S**

**Vijaya Devi, B Aishwarya and Payal Gupta. The expedition titled 'Navika Sagar Parikrama',**

இந்திய கடற்படையின் ஐ என் எஸ் வி தாரிணி பாய்மரப் படகு தென்னாப்பிரிக்காவின் கேப்டவுன் நகருக்கு சென்றடைந்தது. உலகைச்சுற்றிவரும் தனது முதலாவது பயணத்தை மேற்கொண்டுள்ள இப்படகின் மாலுமிகள் அனைவரும் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படகுக்கு லெப்டினன்ட் கமாண்டர் வர்டிகா ஜோஷி தலைமையேற்றுள்ளார். லெப்டினன்ட் கமாண்டர்கள் பிரதிபா ஜம்வால், பி சுவாதி மற்றும் லெப்டினன்ட்கள் எஸ் விஜயாதேவி, பி ஐஸ்வர்யா, பாயல் குப்தா ஆகியோர் இக்கப்பலின் இதர மாலுமிகளாவர். இந்த பயனத்திற்கு " நாவிகா சாகர் பரிக்ராமா".

- **Dr Jitendra Singh launched the social media of "Namaste Shalom", a magazine devoted to India-Israel relations,**

  டாக்டர் ஜிதேந்திர சிங், இந்தியா-இஸ்ரேல் உறவுகள் தொடர்பான நமஸ்தே ஷலோம் என்னும் சமூக ஊடகத்தை தொடங்கி வைத்தார்.

- **A total of 13 Intangible cultural heritage (ICH) elements from India have been inscribed till date on the UNESCO's Representative List of the Intangible Cultural Heritage of Humanity.**

  இந்தியாவில் மொத்தம் தொட்டறியமுடியாத 13 கலாச்சார பாரம்பரிய வகைகள் யுனெஸ்கோவின் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது

- **The Indian Navy concluded a gruelling two-month long War Game on 28 Feb 18. The War Game on the Eastern seaboard was codenamed ENCORE (Eastern Naval Command Operational Readiness Exercise) and on the Western seaboard the codename was Exercise Paschim Lehar.**

  இந்தியக் கடற்படை தனது இரண்டு மாத காலக் கடுமையான போர்ப் பயிற்சியை 2018 பிப்ரவரி 28-ந்தேதி நிறைவு செய்தது. கிழக்குச் கடற்படுகையில் நடைபெற்ற போர்பயிற்சிக்கு என்கோர் எனப் பெயரிடப்பட்டிருந்தது. மேற்குக் கடற்பகுதியில் நடைபெற்ற பயிற்சிக்கு பாஸ்சிம் லேகர் பயிற்சி எனப் பெயரிடப்பட்டிருந்தது

- **The world's largest solar park, Shakti Sthala, has a capacity of 2,000 MW and has set up at an investment of Rs16,500 crore at Pavagada in Karnataka's Tumakuru district.**

  உலகின் மிகப்பெரிய சூரியசக்தி சாக்தி ஸ்தாலா எனும் 2000 கிவாட் திறன் கொண்டதும் சுமார் 16500 கோடி மதிப்பில் கர்னாடாகவில் உள்ள துமக்கூரு மாவட்டத்தில் பவகடா எனும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- **The Ministry of Tourism has launched the Incredible India 2.0 campaign, during the financial year 2017-18 to promote various destinations and**

**tourism products of the country including spiritual, medical and wellness tourism in important and potential source markets overseas.**

மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகம் வியத்தகு இந்தியா 2.0 என்ற பிர்ச்சாரத்தினை 2017-18 நிதி ஆண்டில் , ஆன்மிகம் மற்றும் மருத்துவ சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக துவக்கியுள்ளது

- **Odisha launches 'Khushi' to provide free sanitary napkins to school girls across the state.**

ஒடிசா அரசு குஷி எனப்படும் இலவச சானிட்டரி நாப்கின்களை பள்ளிக்குழந்தைகளுக்கு வழங்கும் திட்டத்தினை துவங்கி உள்ளது.

- **Tamil Nadu Governor Banwarilal Purohit appointed K. Srinivasan, who as the Assembly Secretary.**

சட்டப் பேரவையின் புதிய செயலாளராக கே.சீனிவாசன் அவர்களை ஆளுனர் பன்வாரிலால் புரோகித் நியமனம் செய்தார்.

**Agreements signed Vietnam and India**

- **MoU on Economic and Trade Cooperation.**
- **Work Plan for the years 2018-2022 between the Indian Council of Agricultural Research (ICAR) and Ministry of Agriculture and Rural Development of Vietnam.**
- **MoU on Cooperation between the Global Centre for Nuclear Energy Partnership, India (GCNEP) and the Vietnam Atomic Energy Institute (VINATOM).**

இந்தியா வியட்னாம் புரிந்துணர்வு உடன்படிக்கை

- பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை
- வேளாண் ஆய்வுக்கான இந்திய கவுன்சிலுக்கும், வியட்நாமின் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு அமைச்சகத்துக்கும் இடையேயான 2018 முதல் 2022-ம் ஆண்டு வரையான செயல் திட்டம்
- இந்தியாவின் அணுசக்தி ஒத்துழைப்புக்கான சர்வதேச மையத்துக்கும், வியட்நாமின் அணுசக்தி கல்வி நிறுவனத்துக்கும் இடையே ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை

- **Navjot Kaur scripted history by becoming the first Indian woman to win gold at the Senior Asian Wrestling Championships in Bishkek**

சீனியர் ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான இந்தியாவின் நவ்ஜோத் கௌர் தங்கம் வென்றார். இது, ஆசிய சாம்பியன்ஷிப்பில் இந்தியா வெல்லும் முதல் தங்கப் பதக்கமாகும்.

- **Armenia's parliament chose Armen Sarkissian as the country's new president**

அர்மேனிய பாராளமன்றம் அர்மேன் சர்கிஸ்ஸான் என்பரை அந்த நாட்டின் புதிய குடியரசுத்தலைவராக தேர்ந்தெடுத்துள்ளது

- **Marshall Islands 1st country to launch own cryptocurrency as legal tender**

மார்ஷல் தீவு நாடு உலகிலேயே முதல் முறையாக சொந்தமாக தயாரிக்கக்கூடிய கிர்ப்டோகரன்சியை சட்டபூர்வமாக அங்கீகரித்துள்ள முதல் நாடு

## 90th Oscar award

## 'The Shape of Water' wins Best Picture Oscar ( got awards)

| **Categories** | **Winner** |
|---|---|
| **Best Picture** | **The Shape of Water** |
| **Best Director** | **Guillermo del Toro ஞீ The Shape of Water** |
| **Best Actor** | **Gary Oldman ஞீ Darkest Hour** |
| **Best Actress** | **Frances McDormand ஞீ Three Billboards Outside Ebbing, Missouri** |
| **Best Supporting Actor** | **Sam Rockwell ஞீ Three Billboards Outside Ebbing, Missouri** |
| **Best Supporting Actress** | **Allison Janney ஞீ I, Tonya** |
| **Best Original Screenplay** | **Get Out ஞீ Written by Jordan Peele** |
| **Best Adapted Screenplay** | **Call Me by Your Name ஞீ James Ivory based on the novel by Andrநு Aciman** |
| **Best Animated Feature Film** | **Coco** |

| | |
|---|---|
| **Best Foreign Language Film** | **A Fantastic Woman (Chile) in Spanish** |
| **Best Live Action Short Film** | **The Silent Child** |
| **Best Animated Short Film** | **Dear Basketball** |
| **Best Original Score** | **The Shape of Water ரு Alexandre Desplat** |
| **Best Original Song** | **"Remember Me" from Coco ரு Music and Lyrics by Kristen Anderson-Lopez and Robert Lopez** |
| **Best Sound Editing** | **Dunkirk ரு Richard King and Alex Gibson** |
| **Best Sound Mixing** | **Dunkirk ரு Mark Weingarten, Gregg Landaker and Gary A. Rizzo** |
| **Best Production Design** | **The Shape of Water ரு Production Design: Paul Denham Austerberry; Set Decoration: Shane Vieau and Jeff Melvin** |
| **Best Cinematography** | **Blade Runner 2049 ரு Roger A. Deakins** |
| **Best Makeup and Hairstyling** | **Darkest Hour ரு Kazuhiro Tsuji, David Malinowski and Lucy Sibbick** |
| **Best Costume Design** | **Phantom Thread ரு Mark Bridges** |
| **Best Film Editing** | **Dunkirk ரு Lee Smith** |
| **Best Visual Effects** | **Blade Runner 2049 ரு John Nelson, Gerd Nefzer, Paul Lambertand Richard R. Hoover** |

**90வது ஆஸ்கர் விருதுகள்**

'தி ஷேப் ஆஃப் வாட்டர்' திரைப்படம் சிறந்த திரைப்படம் உள்ளிட்ட **4** பிரிவுகளில் விருதுகளை வென்றுள்ளது. இதற்கு அடுத்தபடியாக 'டன்கிர்க்' திரைப்படத்துக்கு சிறந்த படத்தொகுப்பு உள்ளிட்ட **3** பிரிவுகளில் விருதுகள் கிடைத்துள்ளன.

| | |
|---|---|
| சிறந்த படம் | தி ஷேப் ஆஃப் வாட்டர் |

| | |
|---|---|
| சிறந்த இயக்குநர் | கில்லெர்மோ டெல்டோரோ (தி ஷேப் ஆஃப் வாட்டர்) |
| சிறந்த நடிகர் | கேரி ஓல்டுமேன்(டார்க்கஸ்ட் ஹவர்) |
| சிறந்த நடிகை | பிரான்சிஸ் மெக்டார்மெண்ட் (த்ரி பில்போர்ட்ஸ் அவுட் சைட் எப்பிங்-மிசூரி) |
| சிறந்த குணச்சித்திர நடிகர் | சாம் ராக்வெல் (த்ரி பில்போர்ட்ஸ் அவுட் சைட் எப்பிங்-மிசூரி) |
| சிறந்த குணச்சித்திர நடிகை | ஆலிசன் ஜென்னி (ஐ, டோனிய அல் லா வோனா கோல்டன்) |
| சிறந்த அசல் திரைக்கதை | ஜெட் அவுட் (எழுதியவர் ஜோர்டான் பீலே) |
| சிறந்த தழுவல் திரைக்கதை | கால் மீ பை யுவர் நேம் (ஜேம்ஸ் இவோரி) |
| சிறந்த ஒளிப்பதிவு | பிளேடு ரன்னர் 2049 (ரோஜர் டிக்கின்ஸ்) |
| சிறந்த படத்தொகுப்பு | டன்கிர்க் (லீ ஸ்மித்) |
| சிறந்த பின்னணி இசை | தி ஷேப் ஆஃப் வாட்டர் (அலெக்சாண்டர் டெஸ்பிளேட்) |
| சிறந்த பாடல் | ரிமம்பர் மீ (கோகோ) இசையமைத்தவர் கிரிஸ்டன் ஆண்டர்சன், எழுதியவர் லோபஸ் மற்றும் ராபர்ட் லோபஸ் |
| சிறந்த ஒலித்தொகுப்பு | டன்கிர்க் (ரிச்சர்ட் கிங், அலெக்ஸ் கிப்ஸன்) |
| சிறந்த ஒலிக்கலவை | டன்கிர்க் (மார்க் வெய்ன்கார்டர், கிரெக் லெண்டாகர் மற்றும் கேரி ஏ.ரிஸ்ஸஸா) |
| சிறந்த கலை வடிவமைப்பு | தி ஷேப் ஆஃப் வாட்டர் (பால் டென்ஹாம் அஸ்டர்பெர்ரி, ஷேன் வியூ மற்றும் ஜெஃப் மெல்வின்) |
| சிறந்த ஒப்பனை, கூந்தல் அலங்காரம் | டார்க்கஸ்ட் ஹவர் (கசுஹிரோ சுஜி, டேவிட் மெலினோவிஸ்க், |

| | |
|---|---|
| | லூசி சிப்பிக்) |
| சிறந்த ஆடை வடிவமைப்பு | பான்டம் திரெட் (மார்க் பிரிட்ஜஸ்) |
| சிறந்த விஷீவல் எஃபெக்ட் | பிளேடு ரன்னர் |

- **Shri Nitin Gadkari to launch Sukhad Yatra App and A toll-free number, 1033, will enable users to report an emergency condition, for Highway users**

சுகத் யாத்ரா செயலியையும் நெடுஞ்சாலை பயன்படுத்துவோருக்கான இலவச அவசர தொலைபேசி 1033 சேவையையும் திரு நிதின் கட்கரி தொடங்கி வைக்கிறார். சாலையை பயன்படுத்துவோர் சாலையின் தரம் குறித்த தகவல்கள், சாலை விபத்து குறித்த அறிக்கை, சாலையில் உள்ள பள்ளம், படுகுழிகள் குறித்த அறிக்கை ஆகியவற்றை தாக்கல் செய்யும் வசதி இந்த செயலியில் உள்ளது.

- **Ministry of Home Affairs is implementing the 'Cyber Crime Prevention against Women and Children (CCPWC)' scheme from NIRBHAYA funds during the period 2017-2020**

மத்திய உள்துறை அமைச்சகம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றம் முன் தடுப்பு திட்டத்தினை துவக்கியுள்ளது. இதற்கான நிதி நிர்பயா நிதியிலிருந்து 2017-2020 வரை பெறப்படும்

- **The Government of India has entered into Double Taxation Avoidance Agreements (DTAAs), Tax Information Exchange Agreements (TIEAs) and Multilateral Convention on Mutual Administrative Assistance in Tax Matters (MAC) with over 130 countries including tax havens.**

இந்திய அரசாங்கம் இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் மற்றும் வரி தொடர்பான பரிமாற்ற ஒப்பந்தம் தொடர்பாக மொத்தம் 130 நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

- **49 lakh LED street lights have been installed till date, covering 28 states/UTs under the Street Lighting National Programme (SLNP). The Programme which was launched by the Prime Minister, on 5th January 2015, aims to replace 1.34 crore conventional street lights with energy efficient LED lights by March, 2019. SLNP is being implemented by Energy Efficiency Services Limited (EESL)**

தேசிய தெரு விளக்குகள் திட்டத்தின் கீழ் இது நாள் வரை 28 மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களில் 49 லட்சம் எல் இ டி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. எஸ்எல்என்பி தேசிய ஆற்றல் திறன் லிமிட்டெட் என்ற மின்சார அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பொதுத்துறை நிறுவனங்களின் கூட்டுத்துறை நிறுவனம் செயல்படுத்துகிறது.

- **The World Justice Project released its Rule of Law Index 2017-18 report. India ranked 62.**

  உலக நீதி திட்டம் வெளியிட்ட சட்டத்தின் ஆட்சிக் குறியீட்டில் இந்தியா 62 வது இடம் பெற்றுள்ளது.

- **Global Firepower ranks India's military as fourth strongest in the top five military powers in the world on the Global Firepower List 2017**

  உலகின் சக்திவாய்ந்த ராணுவங்களை கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா நான்காவது இடம் பெற்றுள்ளது. உலகின் சக்தி வாய்ந்த ராணுவங்களை கொண்ட நாடுகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு "2017 குளோபல் ஃபயர் பவர் இன்டெக்ஸ்" என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது

- **Pradhan MantriKisan SAMPADA Yojana expected to benefit 20 lakh farmers and generate 5,30,500 employments by the year 2019-20**

  **The PMKSY has the following schemes:**

  - ✓ **Mega Food Parks**
  - ✓ **Integrated Cold Chain and Value Addition Infrastructure**
  - ✓ **Creation / Expansion of Food Processing & Preservation Capacities**
  - ✓ **Infrastructure for Agro-processing Clusters**
  - ✓ **Creation of Backward and Forward Linkages**
  - ✓ **Food Safety and Quality Assurance Infrastructure**
  - ✓ **Human Resources and Institutions**

-

  பிரதமரின் விவசாயிகள் சம்பாதா திட்டம் 20 லட்சம் விவசாயிகளுக்கு பயனளித்து 5,30,500 வேலைவாய்ப்புக்களை 2019-20-ல் உருவாக்கும். சம்பாதா திட்டம் என்பது வேளாண் கடல்சார் பதப்படுத்துதல் மற்றும் வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள் உருவாக்குதல் திட்டம் ஆகும்

  **கிசான் சம்பதா திட்டடத்தின் சிறப்பு அம்சங்கள்**

  - ✓ பிரம்மாண்ட உணவு பூங்காக்களை உருவாக்குதல்.
  - ✓ ஒருங்கிணைந்த குளிர்பதனம் மற்றும் மதிப்புகூட்டுக் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்
  - ✓ உணவுப் பதனம் / சேமிப்புக்கான திறன் வசதிகளைப் புதிதாக உருவாக்குதல் ஏற்கனவே உள்ளவற்றை விரிவாக்குதல்.

- ✓ உணவுப்பதிப்படுத்தும் தொழில்கள் செறிந்துள்ள பகுதிகளுக்கான கட்டமைப்புகளை உருவாக்குதல்.
- ✓ உணவுப் பதத்தை தொழில்களுக்கு முன்னும் பின்னுமாகத் தேவையாக உள்ள இணைப்பு வசதிகளை உருவாக்குதல்.
- ✓ உணவுப் பாதுகாப்பு மற்றும் தர உத்தரவாதத்திற்கான கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்.
- ✓ இத்துறைக்கு வேண்டிய மனிதவளத்தை உருவாக்குவதும் அதற்கான நிறுவனங்களை ஏற்படுத்துவதும்.

**National People's Party (NPP) president Conrad Sangma took oath as the 12th chief minister of Meghalaya . Conrad Sangma is a non-elected member of 60-seat Assembly. He has to get elected to the Assembly within six months.**

மேகாலயாத்தின் 12வது முதல்வராக தேசிய மக்கள் கட்சித் தலைவர் கான்ராட் சங்மா இபதவியேற்றுக் கொண்டார். 60 உறுப்பினர்களை கொண்ட சட்டப்பேரவையின் தேர்ந்தெடுக்காத உறுப்பினர் இவர் 6 மாத காலத்திற்குள் சட்டப்பேரவை உறுப்பினராக பதவியேற்க வேண்டும்.

**A senior Indian-origin police officer Neil Basu to Become Scotland Yard Anti-Terror Chief**

பிரிட்டனின் பயங்கரவாத தடுப்பு அமைப்பின் தலைவராக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரும், ஸ்காட்லாந்து யார்டு காவல் துறை அதிகாரியுமான நீல் பாசு நியமிக்கப்பட்டுள்ளார்.

**Telangana Chief Minister announced a cash prize of Rs 2 crore to Aruna Budda Reddy who won created history by becoming the first woman from India to win bronze medal World Gymnastics Tournament in Melbourne in Australia.**

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் சமீபத்தில் நடைபெற்ற ஜிம்னாஸ்டிக்ஸ் உலகக் கோப்பை போட்டியில் தனிநபர் பிரிவில் முதல்முறையாக பதக்கம் வென்ற இந்தியப் பெண்மணி என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார். இவருக்கு தெலுங்கான முதலமைச்சர் 2 கோடி ரூபாய் ரொக்கப்பரிசு அளித்துள்ளார்.

**India captain Virat Kohli and senior batsman Cheteshwar Pujara held their second and sixth positions respectively on the batsmen's list while off-spinner in ICC Test Ranking**

ஐசிசி டெஸ்ட் தரவரிசை பட்டியலில் இந்திய அணியின் கேப்டன் விராட் கோலி 2-ஆவது இடத்திலும், புஜாரா 6-ஆவது இடத்திலும் நீடிக்கின்றனர்.

## Information About Meghalaya

- **Meghalaya is part of Seven sister states of North Eastern India. Literal meaning of the state is "abode of the cloud". The capital city is Shilong which is also known as "Scotland of the East".**
- **Full autonomy was accorded to Meghalaya on 2nd April 1970 after passing of Assam reorganisation Act 1969.**
- **In 1971 Indian parliament passed North East Reorganisation act and thus Meghalaya became full fledged Indian state on 21 Jan 1972 by merging the districts of Garo, Khasi and Jaintia hills.**
- **Meghalaya borders with only one state - Assam. It shares international boundary with Bangladesh**
- **India's longest cave system is located in Jaintia Hills in the state of Meghalaya. The cave system is more than 22 Km long and connects two separate caves in the region.**
- **The town of "Cherrapunji" in the Khasi Hills hold world record for maximum rain in a calender month. The village "Mawsynram" near Cherrapunji holds the world record for maximum rain in a year**
- **Nokrek Biosphere reserve located in this state**
- **P A Sangama belongs to this state - he was former speaker of Lok Sabha and also served as Chief Minister of Meghalaya from 1988 to 1990. He fought for President election in 2013 against Pranab Mukherjee but lost against him.**

மேகாலாயா பற்றிய கூடுதல் தகவல்கல்

- ஏழு சகோதரி மாநிலங்கள் என அழைக்கப்படும் வடகிழக்கு மாநிலங்களுள் ஒன்று. உயர்ந்த பீடபூமி பகுதியில் இருப்பதால் மேகங்களின் நாடு என அறியப்படுகிறது அதுவே மேகலாயா என அழைக்கப்படுகிறது.
- தலை நகரம் ஷில்லாங் இது கிழக்கின் ஸ்காட்லாந்து என அழைக்கப்படுகிறது
- அஸ்ஸாம் மறுசீரமைப்புச் சட்டத்தின்படி **1970** ஆம் ஆண்டு மேகாலாயாவிற்கு தன்னாட்சி அந்தஸ்து வழங்கப்பட்டது.
- **1971** ஆம் ஆண்டு வடகிழக்கு மா நிலங்கள் மறுசீரமைப்புச் சட்டம் இயற்றப்பட்டு **1972**ல் மேகாலாயாவிற்கு தனி மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது.
- மேகாலாயா அஸ்ஸாம் மாநிலத்துடன் மட்டுமே எல்லையை பகிர்ந்து கொள்கிறது , பிற பகுதிகள் பங்களாதேஷ் நாட்டை எல்லையாக கொண்டுள்ளது.

- இந்தியாவின் மிக நீண்ட குகை அமைப்பு ஜெய்ந்தியா மலையில் காணப்படுகிறது. இது 22 கி,மீ பகுதியை இணைக்கிறது.
- சிரபுச்ஞ்சி மற்றும் மௌன்சிராம் உலகிலேயே அதிக மழை பெறும் பகுதிகளுள் ஒன்ரு.
- நாக்ரெக் உயிர்கோள மையம் இங்குதான் அமைந்துள்ளது.
- முன்னாள் மக்களவைத் தலைவர் சங்மா இந்த மாநிலத்தை சேர்ந்தவர். 2013 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் தேர்தலில் பிரணாப் முகர்ஜியிடம் தோல்வி அடைந்தார்.
- **Cabinet approves signing of Migration and Mobility Partnership Agreement between India and France**

  போதை மருந்துகள், மனநிலை பாதிக்கும் பொருட்கள், வேதியியல் முன்னோடிப் பொருட்கள் ஆகியவற்றை சட்ட விரோதமாக பயன்படுத்துதல், சட்ட விரோதமாக கொண்டு செல்லுதல் மற்றும் அது தொடர்பான குற்றங்களை குறைப்பதற்கான இந்தியா-பிரான்ஸ் நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் .

- **Cabinet approves continuation of Swatantra Sainik SammanYojana (SSSY) during 2017-2020 . The approval provides for a monthly Samman Pension to freedom fighters, as a token of respect for their contribution in the national freedom struggle and on their demise. with effect from 01.08.1980, a liberalized scheme, namely the 'SwatantrataSainikSamman Pension Scheme, 1980' is being implemented. From the financial year 2017-18 onwards, the nomenclature of the Scheme has been changed as'Swatantrata Sainik Samman Yojana'.**

  சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு மரியாதை அளிக்கும் திட்டத்தை **Swatantra Sainik SammanYojana 2017** முதல் **2020** வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல். நாட்டின் சுதந்திரப் போராட்டத்துக்கு அளித்த பங்களிப்புக்கு மரியாதை அளிக்கும் அடையாளமாக மாதாந்திர ஓய்வூதியம் வழங்க வழிவகை செய்யப்படுகிறது. சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கான ஓய்வூதியத்துக்கு நிதி வழங்கும் வழக்கமான திட்டத்தை **1972**-ம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. அதற்குப் பிறகு, **1.8.1980** முதல் "சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கான ஓய்வூதியத் திட்டம், **1980**" என்ற பெயரில் தளர்த்தப்பட்ட திட்டம் அமல்படுத்தப்பட்டது. **2017-18**-ம் நிதியாண்டு முதல், இந்தத் திட்டத்தின் பெயர், "சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு மரியாதை அளிக்கும் திட்டம்" என்று மாற்றம் செய்யப்பட்டது.

- **The Centre had sanctioned Rs. 1,000 crore for the Phase II of the Impacting Research Innovation and Technology (IMPRINT) India programme.**

  இம்பிரிண்ட் திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்கு மத்திய அரசு **1000** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இது ஆராய்ச்சிகளில் புதுமையை ஏற்படுத்துவதற்காக தொடங்கப்பட்ட திட்டமாகும்.

- **India is hosting the 3rd Global BIOFIN conference in association with the Ministry of Environment, Forest and Climate Change and the National Biodiversity Authority from 6-8 March 2018 in Mamallapuram, Chennai.**

சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், தேசிய பல்லுயிர் ஆணையம் ஆகியவற்றுடன் சேர்ந்து உலக பல்லுயிர் நிதி முன்முயற்சி 3-வது மாநாட்டை இந்தியா மார்ச் 6 முதல் 8-ந் தேதி வரை சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் நடத்துகிறது.

- **DB Shekatkar to recommend measures to enhance combat capability and rebalance defence expenditure of the armed forces.**

மிகவும் அரிய வகையைச் சேர்ந்த, உலகின் கடைசி ஆண் காண்டாமிருகமான 'சூடான்' இறந்தது

உலக காடுகள் தினம்

சர்வதேச அளவில் காடுகளுடைய முக்கியத்துவத்தினைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் மார்ச் 21 ஆம் நாள் 2012 ஆம் ஆண்டு முதல் சர்வதேச காடுகள் தினமாக கொண்டாடப் பட்டு வருகிறது.

சர்வதேச காடுகள் ஆண்டு *2011*

<u>காடுகளின் வகைகள்</u>

பசுமை மாறா மழைக் காடுகள், வெப்ப மண்டல மழைக்காடுகள், புதர்க் காடுகள், புல்வெளிக் காடுகள், சதுப்பு நிலங்கள், அலையாத்திக் காடுகள் என பல வகைகளில் காணப்படுகிறது. பூமத்திய ரேகையின் நேர்க் கோட்டில் அமைந்திருக்கும் இந்திய காடுகள் பல்வேறு சிறப்பு உயிரினங்களின் வாழிடமாக அமைந்துள்ளன. உலகின் மூன்று உயிர்க் கோளங்களுள் ஒன்றான நமது மேற்கு தொடர்ச்சி மலைகள் பல சிறப்புகளை பெற்றுள்ளது. உலகின் மொத்த நிலப்பரப்பில் 14% - மாக இருந்து தற்போது 6% மட்டுமே உள்ள மழைக்காடுகளில் , உலகின் மொத்த உயிரினங்களில் 70 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட உயிரினங்கள் இங்குதான் வாழ்கின்றன

ஒரு நாட்டின் வளத்திற்கு 33% நிலப்பரப்பு காடுகள் தேவை. ஆனால், இந்தியாவில் 22% மட்டுமே காடுகள் வளம் உள்ளது. இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 6,78,333 ச.கி.மீ., மட்டுமே காடுகள் உள்ளது. இதில் திறந்தவெளிக் காடுகள் - 2,87,769 ச.கி.மீ., பரப்பளவும், அடரத்திக் குறைந்த காடுகள் - 3,39,279 ச.கி.மீ., பரப்பளவும், அடர்த்தி மிகுந்த வனங்கள் என்று - 51,285 ச.கி.மீ., பரப்பளவு மட்டுமே உள்ளது.

<u>பசுமை மாறாக்காடுகள்</u>

இந்தியாவில் 200 செ.மீ.க்கும் அதிகமான மழை பெய்யும் பகுதிகளில் இக்காடுகள் அமைந்துள்ளன. இக்காடுகளில் ஆண்டு முழுவதும் பசும் இலைகளோடு கூடிய மரங்கள் காணப்படுகின்றன.

மேலும் இவை உயரமாக வளரக்கூடியவை. மழையளவு குறையும் பகுதிகளில் , பசுமை மாறாக் காடுகளுக்குப் பதிலாக ஈரமுள்ள இலையுதிர்க்காடுகள் காணப்படுகின்றன.

பசுமை மாறாக் காடுகள் அஸ்ஸாம், இமயமலையின் கிழக்குப் பகுதி, மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்குச் சரிவுகள், அந்தமான் தீவுகள் ஆகியவற்றில் அமைந்துள்ளன.

மதிப்பு மிக்க எபோனி, தேக்கு, மூங்கில் போன்ற மரவகைகள் இக்காடுகளில் காணப்படுகின்றன.

<u>இலையுதிர் காடுகள்</u>

இந்தியாவில் 10 முதல் 200 செ.மீ. வரை மழையளவுள்ள பகுதிகளில் இலையுதிர்க்காடுகள் அமைந்துள்ளன.

இங்குள்ள மரங்கள் , வறண்ட பருவ காலங்களில் ஆவியாதலைத் தடுப்பதற்காக இலைகளை உதிர்த்து விடுகின்றன.

பருவ மழையாக உள்ள காரணத்தால், பருவக் காற்றுக் காடுகள் இலையுதிர் வகையைச் சார்ந்தவை.

இவ்விலையுதிர்க் காடுகள், மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குச் சரிவுகளிலும், வடசமவெளியை ஒட்டியமைந்த இமயமலையின் அடிவாரப் பகுதிகளிலும், தக்காணப் பீடபூமியின் வடக்கு மறஅறஉம் கிழக்குப் பகுதிகளிலும் அமைந்துள்ளன. தேக்கு , சால், சந்தனம், ரோஸ்வுட் மற்றும் மூங்கில் ஆகிய மரங்கள் இக்காடுகளில் உள்ளன.

தேக்கு விலையுயர்ந்த மர வகையாகும். இது கப்பல் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. அடுத்து சாலமரம், இந்தியாவில் உள்ள மிக முக்கிய மரவகையாகும்.இது அதிகமாக இருப்புப் பாதையின் குறுக்குக் கட்டையாகப் பயன்படுத்தப்படுகிறது. விலை மதிப்புடைய சந்தன மரக்காடுகள் மைசூரில் காணப்படுகின்றன.

முட்புதர்க் காடுகள்

50 முதல் 100 செ.மீ. வரை மழையளவுள்ள பகுதிகளில் முட்புதர்க் காடுகள் உள்ளன.

இங்குள்ள மரங்கள் , புற்களைத் தின்னும் விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக , கிளைகளிலும், தண்டுகளிலும் முள் அமைப்புகளைக் கொண்டுள்ளன. மாபல் , கைர் ஆகியவை முக்கிய மரங்களாகும்.

இத்தகைய காடுகள் அதிக அளவில் இராஜஸ்தான் , கர்நாடகம், சௌராஷ்டிரா ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன.

பாலைவனத் தாவரங்கள்

25 செ.மீ.க்கும் குறைவாக மழையளவு உள்ள பகுதிகளில் தாவரங்கள் காணப்படுகின்றன.

தார் பாலைவனத்தின் எல்லைப்பகுதி மற்றும் தக்காணப் பீடபூமியின் சில பகுதிகளிலும் , இவ்வகைத் தாவரங்கள் காணப்படுகின்றன.

சப்பாத்திக் கள்ளி, சிரோபடிக் ஆகிய மர வகைகள் நன்கு வளர்கின்றன. இத்தாவரங்கள் உறிஞ்சும் நீரை அதிக நாட்கள் வரை தக்க வைத்துக் கொண்டு , குறிப்பிட்ட அளவு பயன்படுத்தக்கூடியவை. இவை பொருளாதார முக்கியத்துவம் உடையவை அல்ல.

மலைக்காடுகள்

இக்காடுகள் மலைச்சரிவுகளில் காணப்படுகின்றன. இக்காடுகள் மலைகளின் உயரத்திற்கு ஏற்றவாறு வேறுபட்டுக் காணப்படுகின்றன.

900 மீ உயரம் வரையுள்ள சரிவுகளில் அயன மண்டலக் காடுகளும் , அதனை அடுத்து 2700 மீ. உயரம் வரை அகன்ற இலைக்காடுகளும் , 2700 முதல் 3600 மீ உயரத்திற்கு இடைப்பட்ட சரிவில் ஊசியிலைக் காடுகளும் அமைந்துள்ளன.

4800 உயரம் வரை ஆல்பைன் காடுகளும் , 4800 மீட்டருக்கு மேல் பனி வயல்களும் அமைந்துள்ளன. பனி வயல்களில் தாவரங்களே காணப்படுவதில்லை.

<u>மாங்குரோவ் காடுகள்</u>

கங்கை மற்றும் பிரமபுத்திரா ஆகிய ஆற்றுச் சதுப்பு நில டெல்டாக்களில் சதுப்பு நிலக் காடுகள் காணப்படுகின்றன.

இக்காடுகள் சுந்தரவனக் காடுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இங்கு மரங்கள் குட்டையாகவும் , அவற்றின் வேர்கள் நீருக்கு மேல் தோன்றும்படியாகவும் அமைந்துள்ளன.

இத்தகைய காடுகளில் சுந்தரி வகை மரங்கள் சிறப்பாகக் காணப்படுவதால் இக்காடுகள் சுந்தரவனக் காடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

இமய மலையின் அடிவாரத்தில் தராய் காடுகளும் இவ்வகையைச் சார்ந்தவையே.

காடுகளின் பயன்பாடுகளின் காரணமாகவே காட்டுப் பயிற்சியாளர் பயிற்சிக்காக கோவை , டேராடூன் ஆகிய இடங்களில் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கூடுதல் தகவல்கள்

மத்திய அரசு டேராடூனில் காட்டு ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. காடுகளைப் பாதுகாப்பதில் ஈடுபட்டு வரும் ஒரு முக்கிய இயக்கம் உத்திரப் பிரதேசத்தில் தோன்றி செயல்பட்டு வரும் சிப்கோ இயக்கமாகும்.

இந்தியாவில் 1894 முதலாகவே காடுகள் கொள்லை பின்பற்றப்பட்டு வருகிறது. இது 1952-ல் திருத்தப்பட்டது. 1988-ல் இந்திய அரசு புதிய காடுகள் கொள்கையை அறிவித்து காடுகளை மேம்படுத்தி வருகிறது.

1950-ம் ஆண்டு முதல் நாடெங்கிலும் மரம் நடுவிழா ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்று வருகிறது.

அதிக வளர்ச்சியும் , செழிப்பும் இல்லாத காடுகளைத் திருத்தம் செய்து நல்ல இனத்தைச் சேர்ந்த நாட்டுச் செடிகளை உற்பத்தி செய்யும் திட்டத்தை , காட்டு இலாகாவினர் பல மாவட்டங்களில் செயல்படுத்தி வருகின்றனர். இந்த முறையே குமரி பயிர் முறை என்று அழைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில்2013-ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி காடுகளின் மொத்த பரப்பளவு 23,844 சதுர கி.மீ. மொத்த நிலப்பரப்பில் 18.33 சதவீத பகுதிகள் காடுகளாகும்.

இந்திய காடுகள் அறிக்கை -2017

- உலக அளவில் காடுகளின் பரப்பளவில் இந்தியா 10வது இடத்தில் உள்ளது இந்தியப் பரப்பளவில் 24.4 சதவீதம் காடுகளை கொண்டுள்ளது.
- மத்திய பிரதேசம் அதிக காடுகளை கொண்டுள்ளது ( 77,414 ச.கீ) அதனைத் தொடர்ந்து அருணாச்சலப்பிரதேசம் , சட்டிஸ்கர் ஆகியவை உள்ளது.

*இந்த ஆண்டிற்கான 2018 கருப்பொருள் 'Forests for sustainable cities,'*

- **Cabinet approves continuation of Centrally Sponsored Scheme of Rashtriya Uchchatar ShikshaAbhiyan (RUSA) - National Higher Education Mission . RUSA seeks to increase the Gross Enrolment Ratio of the country to 30% by 2020, The project cost in the public funded institutions for all sub-components is shared between the Central Government and State Governments in the ratio of 90:10 for North-Eastern States, J&K, Himachal Pradesh and Uttarakhand, 60:40 for other States and UTs with Legislature and 100:0 for UTs without Legislature.**

  மத்திய அமைச்சரவைக் கூட்டம் மத்திய அரசின் அனைவருக்கும் உயர்கல்வி (ராஷ்ட்ரீய உச்சத சிக்ஷ அபியான்) தேசியத் திட்டத்தை 01.04.2017 முதல் 31.03.2020 வரை நீட்டிக்கத் தமது ஒப்புதலை அளித்துள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த சேர்க்கை விகிதத்தை 2020க்குள் 30% ஆக உயர்த்த விழைகிறது இந்த திட்டம். இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசின் பள்ளிகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான மத்திய மா நில அரசின் நிதிப் பங்கீடு வடகிழக்கு மற்றும் ஜம்மு காஷ்மீர் மானிலத்திற்கு 90:10 விகிதமும் பிற மா நிலங்களுக்கு 60:40 விகிதமும் , மத்திய ஆட்சிப்பகுதியில் 100 சதவீதம் வரை மத்திய அரசின் நிதி உதவி இருக்கும்.

- **On World TB Day March 24, Health Ministry launched the NikshayAushadi Portal**

  உலக காச நோய் தினமான மார்ச் 24 அன்று சுகாதார அமைச்சகம் நிக்ஷய் தளம் என்பதை துவக்கியுள்ளது.

- **The Union Cabinet chaired by the Prime Minister Shri Narendra Modi has approved the North East Industrial Development Scheme (NEIDS), 2017 with financial outlay of Rs.3000 crores upto March, 2020. In order to promote employment in the North East States, Government is incentivizing primarily the MSME Sector through this scheme.**

  மத்திய அமைச்சரவை, 2020, மார்ச் வரை ரூ.3000 கோடி நிதி ஓதுக்கீட்டுடன் வட-கிழக்கு தொழில் வளர்ச்சித் திட்டம் (என்.இ.ஐ.டீ.எஸ்.) 2017-ற்கு ஒப்புதல் அளித்தது. வட கிழக்கு மாநிலங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில், அரசு இத்திட்டத்தின் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலை பிரிவிற்கு முதன்மையாக ஊக்கத்தொகையை அளிக்கும். மேலும், இத்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் அரசு குறிப்பிட்ட ஊக்கத்தொகையை வழங்கும்.

- **Paramparagat Krishi Vikash Yojana to promote organic farming: Radha Mohan Singh**

  இயற்கை வேளாண்மையை மக்களிடம் எடுத்துச் செல்வதற்கு பரம்பராகத் கிருஷி விகாஸ் யோஜனாவை துவக்கியதாக மத்திய வேளாண் அமைச்சர் ராதா மோகன் சிங் அறிவித்துள்ளார்.

- **Cabinet approves continuation of National Health Mission (NHM) from 01-04-2017 to 31-03-2020**

**Cabinet approves Ayushman Bharat - National Health Protection Mission Benefit cover of Rs. 5 lakh per family per year . AB-NHPM will subsume the on-going centrally sponsored schemes -RashtriyaSwasthyaBimaYojana (RSBY) and the Senior Citizen Health Insurance Scheme (SCHIS)**

**Salient Features:**

- ✓ AB-NHPM will have a defined benefit cover of Rs. 5 lakh per family per year
- ✓ Benefits of the scheme are portable across the country and a beneficiary covered under the scheme will be allowed to take cashless benefits from any public/private empanelled hospitals across the country.
- ✓ The beneficiaries can avail benefits in both public and empanelled private facilities. All public hospitals in the States implementing AB-NHPM, will be deemed empanelled for the Scheme
- ✓ To control costs, the payments for treatment will be done on package rate (to be defined by the Government in advance) basis.
- ✓ For giving policy directions and fostering coordination between Centre and States, it is proposed to set up Ayushman Bharat National Health Protection Mission Council (AB-NHPMC) at apex level Chaired by Union Health and Family Welfare Minister.
- ✓ States would need to have State Health Agency (SHA) to implement the scheme States will have the option to use an existing Trust / Society / Not for Profit Company/ State Nodal Agency or set up a new Trust / Society / Not for Profit Company/ State Health Agency to implement the scheme and act as SHA. At the district level also, a structure for implementation of the scheme will need to be set up.

- ஆயுஷ்மான் பாரத்”- தேசிய சுகாதார பாதுகாப்பு இயக்கத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் குடும்பத்திற்கு ஆண்டிற்கு ரூ 5 லட்சம் வரை பலன் கிடைக்கும். தேசிய சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் (ஆர்.எஸ்.பி.ஒய்) மற்றும் முதியோர் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் ஆகியவை இந்த புதிய திட்டத்தில் இணைக்கப்படும்.

**முக்கிய அம்சங்கள்**

- இந்த திட்டத்தின் மூலம் குடும்பம் ஒன்றிற்கு ஆண்டுக்கு ரூ 5 லட்சம் வரையிலான சுகாதார பலன்கள் வழங்கப்படும்.

- நாடெங்கும் உள்ள நோயாளிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் எவ்வித ரொக்கப் பரிமாற்றம் செய்யாமல் சிகிச்சை பெற இயலும்.

- சிகிச்சை செலவை கட்டுப்படுத்த சிகிச்சைக்கான மொத்த செலவும் (அரசு முன்னதாகவே நிர்ணயித்துள்ளபடி) ஒரே தொகுப்பாக்கப்படும்.

- கூட்டாட்சி ஒத்துழைப்பையும் மாநிலங்களுக்கு நெகிழ்வுத் தன்மையையும் வழங்குவது இந்த திட்டத்தின் நோக்கங்களில் ஒன்று. மாநிலங்கள், ஒருங்கிணைப்பின் மூலம் பங்களிப்பாளர்களாக மாற்றுவதற்கு இதில் விதி உள்ளது.

- எந்த திசையில் செல்வது என்பதற்கான கொள்கை வழியையும் மத்திய அரசுக்கும். மாநில அரசுகளுக்கும் இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் தலைமையின் கீழ் ஆயுஷ்மான் பாரத தேசிய சுகாதார பாதுகாப்பு இயக்க கவுன்சில் ஒன்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- மாநில சுகாதார முகமை மூலம் இந்த திட்டத்தை செயல்படுத்தலாம். தற்போதைய அறக்கட்டளை/ சங்கம்/ லாப நோக்கமில்லாத நிறுவனம்/ மாநில சுகாதார முகமை போன்றவை மூலமாகவும் இதனை நிறைவேற்றி மாநில அரசு இதனை கண்காணிக்கலாம். மாவட்ட அளவிலும் இதனை நிறைவேற்ற தனி அமைப்பு ஏற்படுத்துவது அவசியம்.

- **RSBY was launched in the year 2008 by the Ministry of Labour and Employment and provides cashless health insurance scheme with benefit coverage of Rs. 30.000/- per annum on a family floater basis [for 5 members], for Below Poverty Line (BPL) families, and 11 other defined categories of unorganised workers.**

ராஷ்ட்ரிய சுவஸ்திய பீமா யோஜனா **2008** ஆம் ஆண்டு மத்திய வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் நல அமைச்சகம் தொடங்கியது மேலும் இது பணமில்ல சுகாதார காப்பீட்டு திட்டத்தை **30,000** அளவுக்கு **5** நபர்களை கொண்ட குடும்பத்திற்கும் மேலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மற்றும் முறைசாரா தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பட்த்தில் **11** நபர்களுக்கு காப்பிடு வழங்கியது.

- **A Memorandum of Understanding (MoU) was signed at Moscow, Russia between the State Atomic Energy Corporation 'Rosatom'; the Ministry of Science and Technology of the People's Republic of Bangladesh and the Department of Atomic Energy on 1st March 2018 on trilateral cooperation in implementation of the Rooppur Nuclear Power Project in Bangladesh.**

மாஸ்கோவில் இந்தியா மர்றும் , ரஷ்யா , பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கிடையே ரூப்பார் அனுமின் நிலையம் அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மார்ச் **1** ஆம் தேதி

கையெழுத்தானது. இவ்வொப்பந்தம் அந்தந்த நாடுகளின் அணுசக்தி கழகங்களுக்கிடையே போடப்பட்டுள்ளது.

- **To enhance production and distribution of coarse cereals, the Government has decided to declare 2018 as the National Year of Millet,**

சிறுதானிய உற்பத்தியை மேம்படுத்தும் வகையில், 2018-ஆம் ஆண்டை தேசிய சிறுதானிய ஆண்டாக அறிவிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- **The Union Cabinet approved the second and final extension of the term of the Commission constituted to examine the issue of Sub-categorization of Other Backward Classes in the Central List. The Commission was constituted under article 340 of the Constitution with the approval of President on 2nd October, 2017. The Commission, headed by Justice (Retd.) Smt. G.Rohini commenced functioning on 11th October, 2017**

மத்திய அரசு பட்டியலில் உள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பில் உட்பிரிவை பரிசீலிப்பதற்கான ஆணையத்தின் பதவிக் காலத்தை நீட்டித்து மத்திய அமைச்சரவை ஒப்புதல். இந்த ஆணையம் அரசியலமைப்பு சட்ட விதி 340ன் படி 2 அக்டோபர் 2017 அன்று அமைக்கப்பட்டது. இந்த ஆணையத்தின் தலைவராக ஒய்வு பெற்ற நீதிபதி ஜி.ரோஹினி 11 அக்டோபர் 2017 முதல் உள்ளார்.

- **Pradhan Mantri Aawas Yojana (Gramin) (PMAY (G) shall complete one crore houses by March, 2019. launched PMAY (G) on November 20, 2016 (14 months ago) from Agra, Uttar Pradesh.**

கடந்த 2016, நவம்பர் 20ம் தேதி (14 மாதங்களுக்கு முன்) பிரதமர் வீட்டு வசதி திட்டம் (கிராமம்) திட்டத்தை மாண்புமிகு பிரதமர் உத்தரப் பிரதேசம் ஆக்ராவில் தொடங்கி வைத்தார். 2019 மார்ச் 31ம் தேதிக்குள் ஒரு கோடி வீடுகளை கட்டி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

சிறப்பம்சங்கள்

- ✓ தொடர்ச்சியான தேர்வுகள்
- ✓ வழிகாட்டுதல்
- ✓ பாடத்திட்டம் முடித்தல்
- ✓ ஒரு வகுப்பில் 30 பேர்கள் மட்டுமே சேர்க்கப்படுவார்கள்
- ✓ இணையவழிப் பயிற்சி
- ✓ சிறப்பான எழுத்துப் பயிற்சி
- ✓ நடப்பு நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம்

வகுப்பில் சேர தொடர்பு கொள்ளவும்- 9952521550

- **Andhra Pradesh chief minister N Chandrababu Naidu flagged off Naipunya Ratham, a multi-utility vehicle aimed at taking technology and innovation to the remote corners of the State.**

  ஆந்திர முதலமைச்சர் நைப்புன்யா ரதம் எனப்படும் தொழில்னுட்பத்தில் புதுமையை மாநிலங்களின் பல்வேறு பகுதிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த தொடங்கி வைத்தார்

- **The 46th All India Police Science Congress held in Shima himachal Pradesh**

  46வது அனைந்திந்திய காவல் அறிவியல் மா நாடு ஹிமாச்சல பிரதேசம் ஷிம்லாவில் நடைபெற்றது.

- **Government of India has approved Mahila Shakti Kendra scheme for the period 2017-18 upto 2019-20 to empower rural women through community participation.**

  2017-18 முதல் 2019 -20 வரையிலான காலகட்டத்திற்கு ஊரக பெண்களுக்கு அவர்களின் பங்களிப்புடன் அதிகாரமளிக்கும் மகிளா சக்தி கேந்திரா திட்டத்திற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- **The Government of India has decided to nominate Professor J S Rajput, former Director NCERT, as India's representative to the Executive Board (EXB) of UNESCO.**

  யுனெஸ்கோவின் நிர்வாக வாரியத்துக்கு இந்தியப் பிரதிநிதியாக தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சபை (NCERT)-யின் முன்னாள் இயக்குநர் பேராசிரியர் ஜே எஸ் ராஜ்புத்-ஐ நியமிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- **Coastal security exercise 'Sagar Kavach' was conducted in Tamilnaduwhich is held every year in the aftermath of the 2008 Mumbai attack, to keep the coastal security forces on alert**

  கடல் வழியாக பயங்கரவாதிகள் ஊடுருவுவதைத் தடுக்கும் வகையில் ககடற்பகுதிகளில் **'சாகர் கவாச்'** ஆபரேஷன் ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது. 2008 ஆம் ஆண்டு மும்பை தாக்குதலுக்கு பின்னர் கடல் பாதுகாப்பில் எச்சரிக்கையாக இருக்கும் பொருட்டு இந்த ஒத்திகை நடத்தப்படுகிறது.

- **The insect museum at the Tamil Nadu Agricultural University (TNAU) is all set to be thrown open to the public by Chief Minister Edappadi K Palaniswami. which will be first of its kind in the country**

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள நாட்டின் முதல் பூச்சி அருங்காட்சியகத்தை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி திறந்து வைத்தார்.

- **The Congress-led Punjab government proposed a development tax of Rs 200 per month on income tax payees as the budget for 2018-19 focused on fiscal consolidation**

  பஞ்சாப் காங்கிரஸ் அரசு மாநிலத்தின் நிதி நிலைமையை பலப்படுத்தும் வகையில், "மாநில வளர்ச்சிக்கான வரி' என்ற பெயரில் புதிய வரியை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, வருமான வரி செலுத்துவோர் மீது மாதம் ரூ.200 என்ற அடிப்படையில் புதிய வரி விதிப்பதற்கான சட்டம் கொண்டுவரப்படும்

- **After a gap of about seven years, First Flight Under UDAN Scheme In Tamil Nadu Takes Off Between Salem, Chennai under the.' Tamil Nadu Chief Minister K Palaniswami and Union Minister Pon Radhakrishnan flagged off the first service( march 25)**

  7 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் உதான் திட்டத்தின் கீழ் முதல்முறையாக சேலம் முதல் சென்னை வரை விமானப்போக்குவரத்து தொடங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் மத்திய இனை அமைச்சர் பொண் ராதகிருஷ்னன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

- **Jackfruit all set to be Kerala's official fruit.**

  கேரளாவின் அலுவல் பழமாக பலாப்பழம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுஜ உருவாக்கியுள்ளனர்.

- **The IBM engineers have created the world's smallest computer.**

  ஐபிஎம் நிறுவனத்தைச் சேர்ந்த பொறியாளர்கள் உலகின் மிகச்சிறிய கணிணி

- **As 18-year-old Elavenil Valarivan won the women's 10m air rifle gold medal at the ISSF Junior World Cup in Sydney,**

  சிட்டினியில் நடைபெறும் உலக இளைஞர் துப்பாக்கி சுடும் போட்டியில் 10 மீட்டர் ரைபிள் பிரிவில் இந்தியாவைச் சேர்ந்த இளவேனில் வாலறிவன் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

- **Indian Olympic Association (IOA) chooses PV Sindhu as the flag-bearer of the Indian contingent for the opening ceremony of the Gold Coast Commonwealth Games.**

  ஆஸ்திரேலியாவில் நடைபெறும் காமன்வெல் விளையாட்டுப் போட்டியின் துவக்க நிகழ்ச்சியில் கொடியை ஏந்திச் செல்பவராக பிவி சிந்துவை இந்திய ஒலிம்பிக் சங்கம் தேர்ந்தெடுத்தள்ளது.

- **World Water Day is an annual observance day on 22 March. This year's theme - Nature for Water**

  உலக தண்ணீர் தினம் ஆண்டுதோறும் மார்ச் 22 அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான கருப்பொருள் இயற்கைக்காக தன்னீர்

- **World Meteorological Day is annually held on or around March 23 to remember the World Meteorological Organization's establishment on that date in 1950. headquarters in Geneva, Switzerland.**

  உலக வானியல் தினம் ஆண்டு தோறும் மார்ச் 23 அன்று உலக வானியல் அமைப்பு அமைக்கப்பட்டதன் நினைவாக கொண்டாடப்படுகிறது. இதன் தலைமையகம் ஜெனிவாவில் அமைந்துள்ளது.

- **The president of Myanmar Htin Kyaw has resigned, his office has announced.**

  மியான்மர் அரசின் தலைவர் டின் க்யாவ் பதவியிலிருந்து ராஜிநாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

- **2018 march 24 world earth hour observed in new delhi . Earth Hour, which started in Australia in 2007, is being observed by millions of supporters in 187 countries, who are turning off their lights at 8.30pm local time in what organisers describe as the world's "largest grassroots movement for climate change". Its organized by WWF**

  2018 மார்ச் 24ம் தேதி பூமி நேரம் இந்தியாவில் டெல்லியில் அனுசரிக்கப்பட்டது. இது 2007ல் முதல் முறையாக 2007ல் ஆஸ்திரேலியாவில் அனுசரிக்கப்பட்டது இந்த நாளில் ஒரு மணி நேரம் விளக்குகளை அனைத்து வைத்து பருவ நிலை மாற்றத்திற்கு எதிராக அனுசரிக்கப்படும், இந்த நிகழ்ச்சி உலக வனவிலங்கு நிதியத்தால் அனுசரிக்கப்படும்

**ஐ ஏ எஸ் தேர்வு 2019**

ஐ ஏ எஸ் தேர்வு 2019 ஆம் ஆண்டிற்கான தமிழ் வழிப்பயிற்சி ஜீலை முதல் தொடங்க உள்ளது.

முதன்மைத் தேர்வு மற்றும் முதல் நிலைத் தேர்விற்கும் சேர்த்து

மொத்தம் 30 பேருக்கு மட்டுமே பயிற்சி

இனையவழிப் பயிற்சியும் உண்டு

**உலக தண்ணீர் தினம் சிறப்பு கட்டுரை**

உலக உயிர்களுக்கு ஆதாரமாக விளங்குவது நீர். நாம் உயிர் வாழ்வதற்கும், நமது வாழ்வாதாரத்திற்கும், உணவு பாதுகாப்பிற்கும், தொடர் வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருப்பதால்தான் "நீர் இன்று அமையாது உலகம் என்று நீரின் சிறப்பைப் போற்றுகின்றார் பொய்யாமொழிப் புலவர். புவியின் நிலப்பரப்பின் 71 சதவீதம் நீரால் சூழப்பட்டிருப்பினும், இந்த வளத்தின் 96.5 சதவீதம் கடலிலும், மாக்கடலிலும் உள்ளது. எஞ்சியதில் அடுத்தபடியாக பனிக் கட்டியாகவும், பனிப் பாதையாகவும் அடுத்து 1.7 சதவீதம் நிலத்தடி நீராகவும், அளவு இருப்பதாக மதிப்பீடு ஒன்று தெரிவிக்கிறது. மேலும் ஓரளவு நீரின் இருப்பு பெரிய ஏரிகளிலும் குளங்களிலும் காணப்படுகிறது. புவியின் நீர்வளத்தில் 2,5 சதவீதம் தான் நன்னீர் என்பதிலிருந்து அதிகமாகத் தேவைப்படும் இந்தத் திரவத்தின் இருப்பைப் புரிந்து கொள்ளலாம். இந்தப்பின்னணியில் நமது நாட்டில் இருக்கும் நீர் வளம் மற்றும் தேவை பற்றிய புள்ளி விவரங்கள் நமது திட்டங்களை வரைவதற்கும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிகளை வரைவதற்கும் உதவி புரிந்து வருகின்றன.

இந்தப்பின்னணியில் நமது நாட்டில் இருக்கும் நீர் வளம் மற்றும் தேவை பற்றிய புள்ளி விவரங்கள் நமது திட்டங்களை வரைவதற்கும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிகளை வரைவதற்கும் உதவி புரிந்து வருகின்றன. உலக மக்கள் தொகையில் 18 சதவீதத்தைக் கொண்டுள்ள நமது நாட்டின் நிலப்பரப்பு உலகப் பரப்பளவில் 2.4 சதவீதமாகும். அது, உலகின் புதுப்பிக்கத்தக்க நீர் வளத்தில் 4 சதவீதத்தைக் கொண்டுள்ளது. மேலும் இந்த வளத்தின் இருப்பும் நாடு முழுவதும் ஒரே சீரான அளவில் பரவிக் கிடக்கவில்லை . சுத்திகரிக்கப்படாத கழிவுகளும் கழிவு நீரும், நதிகளில் கலப்பதினால் நீர் மாசு அடைவது குடிநீர் விநியோகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி வருவது இயல்பானதாகும். மேலும் அதிகரித்து வரும் மக்கள் தொகையும் தேவையும் கூடுதல் நெருக்கடியை ஏற்படுத்தி வருகின்றன.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே நமது நாட்டு மக்கள் அனைவருக்கும், தரமான குடிநீர் போதுமான அளவு கிடைப்பதை உறுதி செய்யும் நடவடிக்கைகளை, மத்திய, மாநில அரசுகள் எடுத்துவருகின்றன. இதில் ஊரக பகுதி மக்களின் நலனைப் பேணுவதற்கான திட்டங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றன.

**அமைச்சகத்தின் பின்னணி**

ஊரக குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் வகையில், விரைவுபடுத்தப்பட்ட குடி நீர் விநியோகத்திட்டத்தை மத்திய அரசு 1972-1973ம் ஆண்டு தொடங்கியது. இதைத் தொடர்ந்து குடிநீர் பற்றிய தொழில்நுட்ப இயக்கம் 1986ம் ஆண்டு தொடங்கப்பட்டது. குடிநீரின் தரம், உரிய தொழில் நுட்பப் பயன்பாடு, மனித ஆற்றல் மேம்பாட்டிற்கு உதவி ஆகியவை குறித்து இந்தத் திட்டம் கவனம் கொண்டது. பின்னர் இத்திட்டம் 1991-1992ம் ஆண்டு ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் இயக்கம் என பெயர் மாற்றம் பெற்றது. இந்த இயக்கம் பிறகு குடிநீர் விநியோகத் துறை என மேம்படுத்தப்பட்டு 1999ம் ஆண்டு ஊரக வளர்ச்சி அமைச்சகத்தில் தனித்துறையாக உருவாக்கப்பட்டது. பின்னர் 2010ம் ஆண்டு இத் துறை குடிநீர் விநியோகம் மற்றும் துப்புரவுத்துறை என மாற்றி அமைக்கப்பட்டது. கிராம் குடிநீர்

விநியோகம் மற்றும் துப்புரவின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, இத்துறை 2011ம் ஆண்டு ஜூலை மாதம் 13ம் தேதி தனி அமைச்சகமாக அமைக்கப்பட்டது.

**செயல்பாடுகளும் பொறுப்புக்களும்**

குடி நீர் விநியோகம் மற்றும் துப்புரவு அமைச்சகம், குடிநீர் விநியோகம் பற்றிய கொள்கை வரைவு, திட்டமிடுதல், நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் அமைச்சகமாக செயலாற்றி வருகிறது. மேலும் ஊரகப் பகுதிகளில், குடிநீர் விநியோகத்தை மேம்படுத்த வகை செய்யும். அரசின் முன்னணித் திட்டங்களான தேசிய ஊரக குடிநீர் விநியோகத் திட்டத்தையும், ஊரகப் பகுதிகளில் துப்புரவை மேம்படுத்தத் துணை செய்யும் "நிர்மல் பாரத் அபியான்" திட்டத்தையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகிறது. இவற்றை நடைமுறைப்படுத்தும் வகையில், இந்த அமைச்சகத்தில் நீர், நீரின் தரம் மற்றும் துப்புரவு என 3 திட்டச் செயல்பாட்டுப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. 2002ல் ஸ்வஜல்தாரா திட்டமாக தொடங்கப்பட்டப்பணிகள் 2009ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி முதல் தேசிய ஊரக குடிநீர் திட்டமாக மாற்றி அமைக்கப்பட்டது. மத்திய அரசுத் திட்டமான இது கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை போதுமான அளவு வழங்க வகை செய்வதை குறிக்கோளாகக் கொண்டதாகும்.

**தேசிய ஊரக குடிநீர் வசதித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்,**

- எல்லா ஊரகக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் பாதுகாப்பான மற்றும் போதுமான அளவு குடிநீர் கிடைக்க வசதி செய்து தருதல்;
- அரசு பள்ளிகளிலும் அங்கன்வாடிகளிலும் குடிநீர் வசதியை ஏற்படுத்துதல்,
- குடியிருப்புப் பகுதிகளில் குடிநீர் வசதியை ஏற்படுத்தத் தருவதுடன் நின்றுவிடாமல் எல்லா வீடுகளுக்கும் குடி நீர் பாதகாப்பை விரிவுபடுத்துதல்.
- தீர்நிலை, நிலத்தடி நீர் மற்றும் மழை நீர் சேகரிப்பு போன்ற வனங்களை ஒன்றுபட திறம்பட பயன்படுத்துவதற்கான வழிமுறைகளைக் காண்பதின் வாயிலாக குடிநீர் ஆதாரத்திற்கு ஒரே வனத்தை மட்டும் சார்ந்து இருப்பதைத் தவிர்த்தல்;
- குடிநீர் வழங்குதல் தொடர்ந்து நடைபெறு வதை உறுதி செய்யும் வகையில் குடிநீர் திட்டங்களுக்கான பட்ஜெட் தயாரித்தல் மற்றும் கிராம நிலையில் குடி நீர் பாதுகாப்புத் திட்டங்களை வரைதல்;
- தேசிய ஊரக சுகாதாரத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டங்கள், அனைவருக்கும் கல்வி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், நீர் பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை ஒருங்கிணைத்தல். 7, மாநிலங்கள் நீக்குப்போக்கான நிலையைக் கடைப்பிடிக்க வசதி.
- ஊரக குடிநீர் விநியோகத் திட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கும் மாநிலங்களுக்கு ஊக்குவிப்பு..

பாரத் நிர்மாண் ஊரகப் பகுதிகளில் கட்டமைப்பை உருவாக்கும் வகையில் "பாரத் நிர்மாண் இயக்கத்தை மத்திய அரசு 2005ம் ஆண்டு தொடங்கியது. இந்தத் திட்டத்தின் முதல் கட்டப் பணிகள் 2005-06ம் ஆண்டு முதல் 2008-09ம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் செயல்படுத்தப்பட்டன. 2009-10ம் ஆண்டு தொடங்கிய 2வது கட்டப் பணிகள் 2011-12ம் ஆண்டு வரை தொடர்ந்தன. உணரக குடிநீர் வசதித் திட்டம், பாரத் நிர்மாண் திட்டத்தின் கீழ், மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கியப் பணிகளில் ஒன்றாகும்

- **ISA celebrated its founding day on 11th March, 2018.**

  சர்வதேச சூரியக் கூட்டமைப்பு அதனுடைய நிறுவன நாளாக மார்ச் 11,2018ல் கொண்டாடியது

- **India's Geosynchronous Satellite Launch Vehicle (GSLV-F08) successfully launched GSAT-6A Satellite into Geosynchronous Transfer Orbit (GTO) today (March 29, 2018).**

  தகவல் தொடர்புக்கு பயன்படும், 'ஜிசாட் 6 ஏ' செயற்கைக்கோள், ஜி.எஸ்.எல்.வி. F08 மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. ( மார்ச்29,2018)

- **The Union Cabinet has approved signing of the Memorandum of Understanding (MoU) between India and United Kingdom and Northern Ireland regarding cooperation and Exchange of Information for the Purposes of Combating International Criminality and Tackling Serious Organised Crime.**

  மத்திய அமைச்சரவை இந்தியா மற்றும் பிரிட்டன், வட அயர்லாந்து நாடுகளுடன் சர்வதேச அளவில் தீவிரமாக திட்டமிட்டு செய்யப்படும் குற்றங்கள் தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

- **With a production of 1,423 BU in FY 2016, India was the third largest producer and the third largest consumer of electricity in the world, behind China (6,015 BU) and the United States (4,327 BU).**

  இந்தியா 2016 ஆம் நிதியாண்டுக் காலத்தில் உலக அளாவில் சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தப்படியாக மின்சார உற்பத்தியில் உலக அளவில் மூன்றாவது இடம் வகித்தது.

- **Kanadian mathematician Robert Langlands has been named the winner of the Abel Prize for 2018 "for his visionary programme connecting representation theory to number theory,"**

  கனடாவைச் சார்ந்த கணிதவியளாலர் ராபர்ட் லாங்லாண்ட்ஸ் 2018 ஆம் ஆண்டிற்கான கணிதத்தின் நோபல்பரிசாக கருதப்படும் 2018 ஆம் ஆண்டிற்கான ஏபெல் விருதினைப் பெற்றுள்ளார்.

- **Indu Bhushan was appointed as the Chief Executive Officer (CEO) of the Centre's ambitious Ayushman Bharat National Health Protection Mission (ABNHPM).**

மத்திய அரசின் ஆயுஸ்மான் திட்டத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக இந்து பூசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

குருப் 1 மற்றும் 2 முதன்மைத்தேர்வு சேர்க்கை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது

# மத்திய அரசின் நிர்வாகம்

# ( குருப் 1 மற்றும் 2 முதன்மைத் தேர்வுக்காக)

**இந்தியக் குடியரசுத் தலைவர்**

இந்திய அரசியலமைப்பு பாராளுமன்ற அரசாங்க முறைக்கு வகை செய்கிறது. பாராளுமன்ற முறை அரசாங்கத்தில் பெயரளவிலான நிர்வாகத்துறைத் தலைவர் இருப்பது அவசியம். அரசியல் நிர்ணயச்சபைக் கூட்டங்களில் இந்தியாவிற்குப் பாராளுமன்ற முறையே ஏற்றது என ஜவஹர்லால் நேரு வலியுறுத்தினார். இந்தியக் குடியரசுத் தலைவர் பதவி பெயரளவிலான நிர்வாகத் துறைத் தலைவராக உருவாக்கப்பட்டது. இங்கிலாந்தின் அரசியைப் போன்று இந்தியக் குடியரசுத்தலைவர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 53வது உறுப்பு ஒன்றியத்தின் நிர்வாக அதிகாரங்கள் குடியரசுத் தலைவரால் செலுத்தப்படலாம் எனச் சொல்கிறது.

## தேர்ந்தெடுக்கும் முறை

இந்தியக் குடியரசுத் தலைவர் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அரசியலமைப்பின் 54வது உறுப்பு அவரது தேர்தலைப் பற்றிக் கூறுகிறது. பாராளுமன்றத்தின் இருசபைகளிலுமுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் மாநிலச்சட்டப்பேரவைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் கொண்ட தேர்வாளர் குழுவால் குடியரசுத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில் மாற்றத்தக்க ஒற்றை வாக்கின் மூலம் அவரது தேர்தல் நடைபெறுகிறது. பிரதிநிதித்துவத்தில் ஒரே விதமான முறை பின்பற்றப்படவேண்டும் என்ற நோக்கத்தில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் வாக்கின் மதிப்பும் சிக்கலான ஒரு முறைப்படி கணிக்கப்படுகின்றன. அவற்றின் மதிப்பைக் கணிக்கச் சூத்திரங்கள் உள்ளன. தேர்தல் ஆணையம் அவரது தேர்தலை நடத்துகிறது.

## தகுதிகளும் பதவிக்காலமும்

குடியரசுத்தலைவர் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளருக்கெனச் சில தகுதிகளை அரசியலமைப்பின் 58வது உறுப்புக்கூறுகிறது.

- அவர் இந்தியக் குடிமகனாவும் 35 வயது நிரம்பியவராகவும் இருக்கவேண்டும்.
- மக்கள் சபைத் தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றவராக இருக்க வேண்டும்.
- மத்திய மாநில அரசாங்கத்தில் பணியாற்றுபவராக இருக்கக்கூடாது.
- அவர் பாராளுமன்றத்தின் எந்தச்சபையிலும் எந்த மாநிலச்சட்டமன்றத்திலும் உறுப்பினராக இருக்கக்கூடாது.

குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் அவர் பதவி ஏற்கும் நாளில் இருந்து ஐந்து ஆண்டுகள். அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதில் எவ்விதத் தடையும் இல்லை . பதவி நீக்கம், இராஜினாமா, மரணம் ஆகிய காரணங்களால் குடியரசுத்தலைவர் பதவி காலியாகும் போது துணைக்குடியரசுத்தலைவர் நிகழ்நிலைக்குடியரசுத்தலைவராகப் பணியாற்றுகிறார்.

## பதவி நீக்கம்

அரசியலமைப்பின் 61 வது உறுப்பு குடியரசுத்தலைவரின் பதவி நீக்கத்திற்கு வகை செய்கிறது. குடியரசுத்தலைவரைக் குற்ற விசாரணை மூலமாக மட்டுமே பதவி நீக்கம் செய்ய முடியும். குற்ற விசாரணைக்கான குற்றங்களைப் பாராளுமன்றத்தின் ஏதாவது ஒரு சபையில் கொண்டு வரலாம். அத்தகைய தீர்மானம் பதினான்கு நாட்கள் முன்னறிவிப்புடன் அறிமுகப்படுத்தப்படவேண்டும். அத்தீர்மானத்தில் குறைந்த பட்சம், மொத்த உறுப்பினர்களில் நான்கில் ஒரு பங்கினராவது கையொப்பமிட்டிருக்க வேண்டும். அத்தீர்மானம் மொத்த உறுப்பினர்களில் 2/3 பங்கு உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படவேண்டும். தீர்மானம் நிறைவேற்றிய சபை தவிர, மற்றச் சபை புலன் விசாரணையை நடத்தும். புலன் விசாரணையின் போது குடியரசுத்தலைவர் தன் சார்பில் வாதாட யாரையாவது அனுப்பலாம். புலன் விசாரணை செய்யும் சபையும் மொத்த உறுப்பினர்களில் 2/3 பங்கு பெரும்பான்மையுடன் தீர்மானத்தை நிறைவேற்றினால் பதவிநீக்கம் நடைமுறைக்கு வரும். குடியரசுத்தலைவர் நீக்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் புதிய குடியரசுத் தலைவரைத் தேர்வு செய்யும் தேர்தல் நடைபெறும். அதுவரைத் துணை ஜனாதிபதி நிகழ் நிலை ஜனாதிபதியாகச் செயற்படுவார். இந்தியப் பாராளுமன்றத்தில் இதுவரை எந்தக் குடியரசுத்தலைவருக்கும் எதிராகக் குற்ற விசாரணைத் தீர்மானம் கொண்டு வரப்படவில்லை.

## சிறப்புரிமைகள்

இந்தியக் குடியரசுத்தலைவர் இந்தியாவின் முதல் குடிமகனாவார். பன்னாட்டு நிகழ்ச்சிகளிலும் விழாக்களிலும், அவர் இந்தியவைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பங்கேற்கிறார். அவருக்கு மாதம் ஒரு லட்சத்தி ரூபாய் ஐம்பதாயிரம் சம்பளமாக வழங்கப்படுகிறது. இராஷ்ட்ரபதி பவன் எனும் அதிகாரப் பூர்வ இல்லத்தில் அனைத்து வசதிகளுடன் பணியாட்களும் இவருக்கு வழங்கப்படுகின்றனர். இவரது சம்பளமும் பிற

படிகளும் இந்தியாவின் குவிப்பு நிதியிலிருந்து(consolidated fund) வழங்கப்படுகின்றன. இவரது பதவிக்காலத்தில் இவர் பெறும் சம்பளம் மற்றும் பிற சலுகைகளைக் குறைக்க முடியாது. மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் இவரது பெயரிலேயே செய்யப்பட்டாலும் அவற்றின் காரணமாக இவர் மேல் வழக்குத் தொடர முடியாது.

**பணிகளும் அதிகாரங்களும் நிர்வாகம்**

**நிர்வாக அதிகாரம்**

- பிரதமரை குடியரசுத்தலைவர் நியமிக்கிறார்.
- பிரதம அமைச்சரின் பரிந்துரையின் பேரில் அமைச்சரவையில் பிற அமைச்சர்களையும் அவர் நியமனம் செய்கிறார்.
- மாநிலத்தின் ஆளுநர்கள், ஒன்றியப் பிரதேசங்களில் லெப்டினன்ட் கவர்னர்கள் போன்றவர்களும் இவரால் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் குடியரசுத்தலைவருக்குப் பொறுப்பானவர்கள்.
- தேர்தல் ஆணையத்தின் தேர்தல் ஆணையாளரையும் பிற முக்கிய அதிகாரிகளையும்
- இந்திய அரசாங்கத்தின் தலைமைத், தணிக்கையாளர்,
- தலைமை வழக்கறிஞர். தலைமைப் பதிவாளர் போன்றோரையும் அவர் நியமிக்கிறார்.
- மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினர்களையும் தலைவரையும் குடியரசுத்தலைவர் நியமிக்கிறார்
- நாட்டின் முப்படைகட்கும் தலைமைத் தளபதி குடியரசுத்தலைவரே.
- படைகளில் மூத்த அதிகாரிகளையும் குடியரசுத்தலைவர் நியமிக்கிறார்.
- போர்ப்பிரகடனம், அமைதிப்பிரகடனம் ஆகியவற்றைச் செய்கின்ற அதிகாரம் குடியரசுத் தலைவருக்கே உண்டு.
- வெளிநாடுகளுடனான ஒப்பந்தங்களை அவர் செய்கிறார். 1
- எல்லாவிதமான நிர்வாகச் செயல்களும் அவரது பெயரிலேயே செய்யப்படுகின்றன.
- அரசாங்கத்தின் செயல்கள் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளும் உரிமை அவருக்குண்டு.

**சட்ட அதிகாரம்**

- குடியரசுத்தலைவர் பாராளுமன்றத்தின் ஒரு பகுதியாகத் திகழ்கிறார்
- பாராளுமன்றத்தின் இருசபைகளையும் கூட்டவும் கூட்டத்தொடரை ஒத்தி வைக்கவும் குடியரசுத்தலைவர் அதிகாரம் பெற்றுள்ளார்.
- பாராளுமன்றத்தின் லோக்சபையை அவர் கலைக்கலாம்.
- மாநிலங்களவைக்குப் பன்னிரண்டு உறுப்பினர்கள் அவரால் நியமிக்கப்படுகின்றனர்.
- மக்களவைக்கு இரண்டு ஆங்கிலோ இந்திய உறுப்பினர்கள் அவரால் நியமிக்கப்படுகிறார்.
- பாராளுமன்றக் கூட்டங்களில் பேசவும் உரிமை பெற்றுள்ளார்.
- ஒவ்வொரு ஆண்டும் முதல் கூட்டத்தில் அரசாங்கத்தன் செயற்பாடுகள், கொள்கைகள் ஆகியவை பற்றிப் பாராளுமன்றத்தின் இருசபைகளின் கூட்டுக்கூட்டத்தில், உரையாற்றுகிறார்.
- பாராளுமன்றத்திற்கு அவர் செய்திகள் அனுப்பலாம்.
- இரு சபைகளிடையே ஏற்படும் சட்டப்பிணக்குகளைத் தீர்க்க இருசபைகளின் கூட்டுக்கூட்டத்தை அவர்கூட்டலாம்.
- பாராளுமன்றத்தின் இரு சபைகளாலும் இயற்றப்படும் மசோதாக்கள் அவரது ஒப்புதலைப் பெற்றபின்னரே சட்டமாகின்றன.
- எந்தச் சபையில் மசோதா துவங்கியதோ அந்தச் சபைக்கே மசோதாவை மறுபரிசீலனைக்காக அவர் அனுப்பலாம் அல்லது தன் ஒப்புதலை மறுக்கலாம். ஆனால் அத்தகைய மசோதாக்கள் பாராளுமன்றத்தால் மீண்டும் நிறைவேற்றப்பட்டால் அவர் தன் ஒப்புதலை அளித்தே ஆக வேண்டும்.
- பணமசோதாக்கள் அவரது முன் அனுமதி பெற்ற பின்னரே பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்துகின்றன.
- மாநிலங்களின் எல்லை மாற்றம், பெயர் மாற்றம், புதிய மாநிலத்தை உண்டாக்குதல் போன்றவை சம்பந்தப்பட்ட மசோதாக்களும் அவரது அனுமதி பெற்றே அறிமுகப்படுத்தப்படுகின்றன.
- மாநிலச் சட்டமன்றங்களில் கூடச் சில மசோதாக்களை அறிமுகப்படுத்த ஜனாதிபதியின் முன் அனுமதி வேண்டும்.
- அவசரச் சட்டங்கள் இயற்றும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அரசியலமைப்பின் 123வது உறுப்பு இவ்வதிகாரத்தை அவருக்கு வழங்குகிறது. பாராளுமன்றம்

கூட்டத் தொடரில் இல்லாத காலங்களில் பிறப்பிக்கப்படும் இத்தகைய அவசரச் சட்டங்கள் சாதாரணச்சட்டங்கட்குச் சமமானவை. நீதித்துறை

## நீதித்துறை அதிகாரங்கள்

- இந்தியத் உச்ச நீதிமன்றத்திற்கும், உயர்நீதிமன்றங்களுக்குமான நீதிபதிகளை அவர் நியமிக்கிறார்.
- உச்ச நீதிமன்றத்தின் செயல்முறை பற்றிய விதிகள் அவரது ஆலோசனையுடன் வகுக்கப்படுகின்றன.
- குற்றத்திற்கான மன்னிப்பு, தண்டனைக்குறைப்பு, தண்டனை ஒத்தி வைப்பு போன்றவைகளை வழங்க அவர் அதிகாரம் பெற்றுள்ளார்.
- அவரின் அரசாங்கப் பணி சம்பந்தப்பட்ட செயல்கட்காக அவர் மீது யாரும் வழக்குத் தொடர முடியாது.
- அவரைக்கைது செய்யப் பிடி ஆணை பிறப்பிக்க முடியாது. அவரிடம் நஷ்டஈடு கோருகின்ற சிவில் வழக்கு எதுவும் அவர் மீது தொடர முடியாது.

## நெருக்கடி நிலை அதிகாரங்கள்

- இந்திய அரசியலமைப்பு நெருக்கடி நிலைக்காலம் அறிவிக்கப்பட வகை செய்கிறது.
- நெருக்கடி நிலைக்காலத்தில் குடியரசுத்தலைவர் அதிகமான அதிகாரங்களைப் பெறுகிறார்.
- வெளிநாட்டினர் போர் தொடுக்கும் அபாயம் இருந்தாலும் உள்நாட்டில் அமைதிக்குலைவு ஏற்பட்டாலும்
- நெருக்கடி நிலைப்பிரகடனம் - செய்வதில் அரசியலமைப்பின் 44 வது திருத்தம் சில மாற்றங்களைச் செய்துள்ளது. நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்யப்பட்ட ஒரு மாத காலத்தில் பாராளுமன்றத்தில் 2/3 பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் ஒப்புதல் பெற வேண்டும். அவசர நிலைப் பிரகடனம் ஆறு மாத காலத்திற்கே நடைமுறையில் இருக்கும். அந்நிலையைத் தொடரப் பாராளுமன்றம் தீர்மானம் இயற்றி அனுமதி அளிக்கலாம். உள்நெருக்கடி நிலை அறிவிக்க உள்நாட்டில் ஆயுதம் தாங்கிய புரட்சி ஏற்படும் நிலை உள்ளதா என்பதை அவர் கண்டறிய வேண்டும்.
- அமைச்சர் குழுவின் ஆலோசனையை எழுத்து வடிவில் அவர் பெற வேண்டும். 1978ல் மேற்கொள்ளப்பட்ட 44 வது அரசியலமைப்புத்திருத்தம் இத்தகைய மாற்றங்களைச் செய்துள்ளது. தற்போது குடியரசுத் தலைவர் எளிதாக அவசர நிலைப் பிரகடனம் செய்ய முடியாது.

## பிற அதிகாரங்கள்

- மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் தனது ஆண்டறிக்கையைக் குடியரசுத்தலைவரிடம் சமர்ப்பிக்கிறது.
- அட்டவணை வகுப்பினருக்கான ஆணையர், இந்தியத் தலைமைத் தணிக்கையாளர் ஆகியோர் தங்களது அறிக்கைகளைச் சமர்ப்பிக்கிறார்கள்.
- இந்த அறிக்கைகள் அனைத்தும் பாராளுமன்றத்தில் வைக்கப்படக் குடியரசுத்தலைவர் பொறுப்பேற்கிறார். மொழி பற்றிய குழுவை நியமிக்க அவர் அதிகாரம் பெற்றுள்ளார்.

## குடியரசுத் தலைவரின் நிலை

இந்தியாவின் எழுதப்பட்ட அரசியலமைப்பு குடியரசுத் தலைவரின் நிலையைத் தெளிவுபடுத்துகிறது. இங்கிலாந்தின் அரசியார் மக்களின் நம்பிக்கையை எளிதாகப் பெற்றுவிடுகிறார். அவர் தேர்தலில் நின்று 'பதவிக்கு வர அவசியமில்லை என்பதால் எந்த அரசியல் கருத்து வேறுபாட்டிலும் அவர் சிக்குவதில்லை . ஆனால் இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலில் நின்று பதவிக்கு வருவதால் அரசியல் கருத்து வேறுபாட்டிலிருந்து அவர் தப்புவது கடினமானதாகும். எனினும் அப்பதவியின் மதிப்பையும் மேலான நிலையையும் காப்பது அதை வகிப்பவர்களின் ஆளுமையையும் திறமையையும் பொறுத்ததது, டாக்டர் இராஜேந்திர பிரசாத் இந்தியாவின் முதல் குடியரசுத்தலைவராகத் திகழ்ந்தார். 1951ல் அவருக்கும். இந்தியாவின் முதல் பிரதமரான நேருவிற்குமிடையே கருத்துவேறுபாடுகள் வந்தன. ஜனாதிபதி எனும் முறையில் தாம் தன்னிச்சைப்படி நடக்கச் சுதந்திரம் உண்டு என இராஜேந்திர பிரசாத் கருதினார். அமைச்சரவையின் ஆலோசனையைத் தாம் மீறலாம் என எண்ணினார். இதுபற்றி நேரு பல சட்ட நிபுணர்களன் கருத்துக்களைக் கேட்டறிந்தார். குடியரசுத் தலைவர் வெறும் பெயரளவிலான தலைவரேயாவார் எனக்கருதினார்கள். இக்கருத்தைத் உச்ச நீதிமன்றமும் ஒரு வழக்கில் உறுதி செய்தது.

## வெறும் ரப்பர் முத்திரையா?

இந்தியா பாராளுமன்றமுறை அரசாங்கம் உள்ள நாடு. பாராளுமன்ற முறை அரசாங்கத்தில் பெயரளவிலான நிர்வாகத்தலைவர் அவசியமாகிறார். அரசியலமைப்பு அவருக்கு விரிவான அதிகாரங்களை வழங்கினாலும் அவர் பெயரளவிலான தலைவராகவே திகழ்கிறார். அமைச்சரவையின் ஆலோசனையின்படியே அவர் நடக்க வேண்டும். இந்திய ஜனாதிபதியின் நிலை பற்றிப் பல கருத்துக்கள் கூறப்பட்டன. அரசியலமைப்பின்53(1) வது விதி மைய அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரம் ஜனாதிபதியிடம் உள்ளதாகக் கூறுகிறது. 74 வது உறுப்பு அவருக்கு ஆலோசனை கூறவும், உதவவும் அமைச்சரவை உள்ளதாகக் கூறுகிறது. அவரது நிலை தெளிவற்ற தன்மையைக் கொண்டிருந்தது. ஆனால் அரசியலமைப்பின் 42 வது திருத்தம் அவரது நிலையைத் தெளிவாக்கி யுள்ளது. ஜனாதிபதி அமைச்சரவையின் ஆலோசனையின்படி தான் நடக்க வேண்டும் என்ற கட்டாயத்தை இத்திருத்தம் வலியுறுத்துகிறது.

சில அரசியல்வாதிகள் சிலர் குடியரசுத் தலைவர் பதவி வெறும் ரப்பர் முத்திரைபோல் இருக்கிறார் எனக்குறை கூறுகிறார்கள். இது முழுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. இங்கிலாந்தின் அரசியார் தங்க பூஜ்யம் (Golden Zero) என அழைக்கப் படுகிறார். இது அரசியலமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.

குடியரசுத்தலைவர்கள் சிலர் கடுமையான விமரிசனங்கட்கு உள்ளானார்கள். V.V. கிரி, பக்ருதீன் அலி அகமது, சஞ்சீவரெட்டி ஆகியோர் பிரதமர் பதவி வகித்தவர் சொல்லியபடியெல்லாம் செயற்பட்டதாகக் குறை கூறப்பட்டது. இந்திய அரசியலில் மாறுபட்டுவரும் அரசியல் சூழலில் ஜனாதிபதி பதவி அதிக முக்கியத்தும் பெற்று வருகிறது. 1984ல் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டபோது அமைதியான அதிகார மாற்றம் ஏற்பட அப்போது ஜனாதிபதியாக இருந்த கியானி ஜெயில்சிங் வகை செயதார். 1990 நவம்பரில் வி.பி.சிங் பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்தபோது ஜனாதிபதி வெங்கட்ராமன் மேற்கொண்ட நடவடிக்கைகள் சிலரால் விமரிசிக்கப்பட்டன. அதே போன்று சந்திரசேகர் தமது பிரதமர் பதவியை இராஜினாமா செய்த போது ஜனாதிபதி அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்வதில் காட்டிய நிதானம் எதிர்க்கட்சிகளால் குறை கூறப்பட்டது.

மக்களவையில் எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் சிறுபான்மை அரசாங்கங்கள் பதவி வகிக்கும் சூழ்நிலை கடந்த சில ஆண்டுகளாக நிலவி வருகிறது. இத்தகைய சூழ்நிலையில் ஜனாதிபதி பதவி அதிக முக்கியத்துவம் பெறுகிறது. நாட்டின் நலனைக் கருத்திற் கொண்டும், எந்தவொரு அரசியல் கட்சியையும் சாராமலும் செயற்படவேண்டிய நிலையிலும் ஜனாதிபதி இருக்கிறார். அமைச்சரவைக்கும் இடையில் மிகப்பெரிய அளவிலான கருத்து வேறுபாடுகளோ அல்லது மோதல்களோ நிகழவில்லை.

ஜெயில்சிங் ஜனாதிபதியாக இருந்தபோது பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்ட அஞ்சல்துறை தொடர்பான மசோதாவின் மீது எந்த முடிவும் எடுக்காமல் விட்டுவிட்டார். 1996ல் அப்போதைய அமைச்சரவை பரிந்துரைத்த இரண்டு அவசரச்சட்டங்களில் அன்றைய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா கையொப்பமிட மறுத்து விட்டார். தேர்தல் நேரத்தில் பரிந்துரைக்ககப்பட்ட அம்மசோதாக்கள் கருத்து முரண்பாடுகளை உருவாக்கின. 1997ல் உத்திரப்பிரதேசத்தில் 356வது உறுப்பின் கீழ் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்ய I.K. குஜ்ரால் அரசாங்கம் பெய்த பரிந்துரையை மறு பரிசீலனை செய்யக் கோரி ஜனாதிபதி K.R. நாராயணன் திருப்பி அனுப்பினார். 1998 ல் இது போன்ற அனுபவம் பீகார் அரசாங்கத்தைப் பதவி நீக்கம் செய்யுமாறு அறிந்த பரிந்துரையில் வாஜ்பாயிக்கு ஏற்பட்டது.

இந்திய அரசியலில் பல மாறுபட்ட சூழல்கள் தோன்றியுள்ளன. ஒருகட்சிப் பெரும்பான்மை அல்லது மேலாதிக்கம் என்பது மக்களவையில் இனி எப்போது வரலாம் என்பது ஐயத்திற்குரியதாக உள்ளது. கூட்டணி அரசாங்கங்களின் ஆயுள் உறுதி காப்பீடு செய்யப்படவில்லை. இந் நிலையில் குடியரசுத் தலைவரின் அணுகுமுறையும் செயற்பாடும் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இங்கிலாந்தில் அரசியார் இருப்பது போன்று இந்திய குடியரசுத் தலைவர் பதவியையும் செயற்படுத்தாமல் சில அவசியமான மாற்றங்கள் செய்யப்படலாம் என்ற கருத்துப் பலராலும் கூறப்படுகிறது.

## துணை குடியரசுத் தலைவர்

குடியரசுத் தலைவரின் பணிகளில் அவருக்கு உதவும் வண்ணம் துணை குடியரசுத் தலைவர் பதவிக்கு இந்திய அரசியலமைப்பு வகை செய்கிறது. இந்திய அரசியலமைப்பு வகை செய்யும் தக்கது எனலாம். அமெரிக்க அரசியலமைப்பும் துணை ஜனாதிபதி பதவிக்கு வகை செய்கிறது. இந்தியத் துணை குடியரசுத் தலைவர் பதவியை உறுப்பு 63 உருவாக்கியுள்ளது. அவரது நிலை அதிகாரங்கள் மற்றும் பணிகளை 64 முதல் 68 வரையிலான உறுப்புகள் கூறுகின்றன.

## தகுதிகள்

- அவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
- 35வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.
- மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடத் தகுதியுள்ளவராக இருக்க வேண்டும்.
- இந்திய அரசாங்கத்திலோ அல்லது மாநில அராசங்கம் எதிலாவதோ ஊதியம் பெறுகின்ற ஊழியராக இருக்கக்கூடாது.
- பாராளுமன்றத்தின் எந்தச் சபையிலோ அல்லது ஏதேனும் மாநிலச் சட்டமன்றத்திலோ உறுப்பினராக இருக்கக்கூடாது. அவ்வாறு ஏதேனும் ஒரு சபையில் உறுப்பினராக இருந்தால் துணை ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கும் நாளில் சபை உறுப்பினர் பதவி தானாகவே ரத்தாகிவிடும்.

## தேர்தலும் பதவிக்காலமும்

துணை ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் தேர்வாளர் குழுவில் பாராளுமன்றத்தின் இருசபை உறுப்பினர்களும் அடங்குவர். மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்பதிலை. விகிதப் பிரதிநிதித்துவ முறையில் மாற்றத்தக்க ஒற்றை வாக்கு அடிப்படையில் இவரது தேர்தல் நடைபெறும். துணைக் குடியரசுத் தலைவர் தேர்தலுக்காகப் பாராளுமன்றத்தின் இரண்டு சபைகளும் கூட்டாக அமரும் நடைமுறை இருந்தது. ஆனால் 1961ல் செய்யப்பட்ட 11 வது திருத்தம் அதனை மாற்றிவிட்டது. துணை ஜனாதி பதியின் பதவிக்காலம் அவர் பதவியேற்ற நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளாகும். அவரது பதவிக்காலம் முடிவடைந்தாலும் அடுத்த துணை ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் வரை அவர் தமது பதவியில் தொடர்ந்திருப்பார். இவருக்கு மாதச் சம்பளம் ரூபாய் ஒரு லட்சத்தி இருபத்தைந்தாயிரம் ஆகும். இவருக்கு அதிகாரப்பூர்வ இல்லமும். பணியாளர்களும் உள்ளனர்..

## பதவி நீக்கம்

துணை குடியரசுத் தலைவர் தமது பதவியை எழுத்து மூலம் குடியரசுத் தலைவருக்கு தெரிவித்து இராஜினாமாச் செய்யலாம். அவரைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உண்டு. அதற்கான தீர்மானம் மாநிலங்களவையில் பதினான்கு நாட்கள் முன்னறிவிப்புடன் கொண்டு வரப்பட்ட வேண்டும். அவ்வாறு கொண்டு வரப்படும் தீர்மானம் மாநிலங்களவையின் அப்போதைய மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படவேண்டும். மாநிலங்களவையில்

நிறைவேற்றப்படும் பதவி நீக்கத் தீர்மானம் மக்களவையால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். இந்நீக்க முறை குடியரசுத் தலைவர் மீதான குற்றவிசாரணை முறையிலிருந்து மாறுபட்டதாகும்.

**மாநிலங்களவைத் தலைவராக**

துணை குடியரசுத் தலைவரின் முக்கியமான பணி மாநிலங்களவைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதாகும். துணை குடியரசுத் தலைவராக இருப்பதாலேயே அவர் மாநிலங்களைவையின் (Ex offico -பதவியின் வழியே) தலைவராகிறார். அதன் கூட்டங்களை முறைப்படுத்தி நடத்துவதில் மக்களவையின் சபாநாயகருக்கு நிகரான அதிகாரங்களை அவர் பெறுகிறார். சபையில் தீர்மானங்கள் மற்றும் மசோதாக்கள் மீது வாக்கெடுப்பு நடத்தி முடிவுகளை அறிவிக்கிறார். சாதாரணமாக, சபையில் வாக்களிக்கும் உரிமை இல்லை. ஆனால் வாக்குச் சமநிலையின் போது முடிவு செய்து வாக்கினை அளிக்கும் உரிமை இவருக்கு உண்டு. இவருக்கு உதவ ஒரு துணைத் தலைவரை மாநிலங்களவை தேர்ந்தெடுக்கிறது.

**தற்காலிக குடியரசுத் தலைவராக**

இந்திய குடியரசுத் தலைவர் பதவி மரணம், இராஜினாமா மற்றும் பதவி நீக்கம் காரணமாகக் காலியாகலாம். அவ்வாறு அப்பதவி காலியாகும் போது துணை குடியரசுத் தலைவர் புதிய குடியரசுத் தலைவர் தேரந்தெடுக்கப்படும் வரையில் நிகழ்நிலை ஜனாதிபதி (Acting President) ஆகிறார். உடல் நலக் குறைவு காரணமாகவோ அல்லது நீண்ட நாட்கள் அன்னிய நாடுகட்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டாலோ துணை குடியரசுத் தலைவரை குறிப்பிட்ட காலத்திற்கு நிகழ்நிலை குடியரசுத் தலைவராக நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. நிகழ்நிலை குடியரசுத் தலைவராகச் செயற்படும் போது துணை குடியரசுத் தலைவர், குடியரசுத் தலைவர் சம்பளம், சலுகைகள் மற்றும் அனைத்து அதிகாரங்களையும் பெறுகிறார். அக்காலத்தில் அவர் மாநிலங்களவைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதில்லை.

**பிற பணிகளும் அதிகாரங்களும்**

துணை குடியரசுத் தலைவர் சில அரசியல் விவேகப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படலாம். சில நாடுகளுடனான நல்லுறவைப் பலப்படுத்த அவர் இந்திய அரசின் பிரநிதியாக அனுப்பப்படலாம். பன்னாட்டு விழாக்கள் அல்லது நிகழ்ச்சிகளுக்கும் அவரை இந்திய குடியரசுத் தலைவர் இந்தியாவின் சார்பில் அனுப்பி வைக்கலாம். சில மத்தியப் பல்கலைக் கழகங்களின் வேந்தராகவும் துணை ஜனாதிபதி பொறுப்பு வகிக்கிறார். ,

**துணைக் குடியரசுத்தலைவரின் நிலை**

இந்தியத் துணை குடியரசுத் தலைவர் பல விஷயங்களில் அமெரிக்கத்துணை ஜனாதிபதியை ஒத்துள்ளார். இருவருக்கும் தேவையான தகுதிகள் ஓரளவு ஒத்துள்ளன. அமெரிக்க செனட்டின் தலைவர் அமெரிக்கத் துணை ஜனாதிபதி. அதேபோல் இந்திய மாநிலங்கள் சபையின் தலைவர் இந்தியத் துணை ஜனாதிபதி. அமெரிக்க ஜனாதிபதியும் துணை ஜனாதிபதியும் நான்கு ஆண்டுகள் பதவி காலத்திற்குத்

தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதே போன்று இந்திய ஜனாதிபதியும் துணை ஜனாதிபதியும் ஐந்தாண்டுகள் பதவிக்காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எனினும் அமெரிக்க இந்தியத் துணை ஜனாதிபதிகளிடையே சில வேறு பாடுகள் உள்ளன.

அமெரிக்க ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் தேர்வாளர் குழுவே அமெரிக்கத் துணை ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கிறது. ஆனால் இந்திய குடியரசுத் தலைவரை தேர்ந்தெடுக்கும் தேர்வாளர் குழுவிற்கும் துணை குடியரசுத் தலைவரை தேர்ந்தெடுக்கும் குழுவிற்குமிடையே மாறுபாடு உண்டு. அமெரிக்கத் துணை ஜனாதிபதியைக் குற்ற விசாரணை மூலமாக மட்டுமே பதவி நீக்கம் செய்ய முடியும். இந்தியத் துணை ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்யக் குற்ற விசாரணை தேவையில்லை. பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சாதாரணத் தீர்மானம் மூலமாகவே அவர் பதவி நீக்கம் செய்யப்படலாம். இந்தியாவில் குடியரசுத் தலைவர் பதவி காலியாகும் போது துணைக் குடியரசுத் தலைவர் நிகழ்நிலை குடியரசுத் தலைவராக மட்டுமே பணியாற்றுகிறார். புதிய குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவி ஏற்கும் வரை மட்டுமே அவர் அப்பணியில் தொடர்கிறார். இது வரை இந்தியாவில் 14 குடியரசுத் தலைவர் பொறுப்பு வகித்துள்ளனர். இவர்களில் ஆறு பேர் துணை குடியரசுத் தலைவராக இருந்து குடியரசுத் தலைவரானர்கள் ஆவர்.

**அமைச்சரவை**

இந்தியக்குடியரசுத் தலைவர் பெயரளவிலான நிர்வாகத் துறையாகவே செயல்படுகிறார். உண்மையான நிர்வாகம் என்பது பிரதம அமைச்சரின் தலைமையில் அமைந்துள்ள அமைச்சரவை ஆகும். அரசியலமைப்பின் 74 (1) வது உறுப்பு குடியரசுத் தலைவருக்கு உதவும் ஆலோசனை கூறவும் அமைச்சரவை இருக்கும் எனக்கூறுகிறது. 75(5) வது உறுப்பு அமைச்சர்களின் தகுதியைக் கூறுகிறது. அமைச்சருக்கான ஒரே தகுதி அவர் பாராளுமன்றத்தின் ஏதாவது ஒரு அவையில் உறுப்பினராக இருக்க வேண்டும் என்பது தான். பாராளுமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டால் அவர் பதவியேற்ற நாளிலிருந்து ஆறுமாத காலத்திற்குள் பாராளுமன்றத்தின் ஏதாவது ஒரு அவையின் உறுப்பினராக ஆக வேண்டும். பாராளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படும் சம்பளம், படிகள் ஆகியவை அமைச்சர்கட்கு உண்டு.

**அமைச்சரவையும் அமைச்சர் குழுவும்**

பிரதம அமைச்சரின் தலைமையில் அமைந்துள்ள அமைச்சரவைக்கு அரசியலமைப்பு வகை செய்கிறது. அமைச்சர்களை அமைச்சர் குழு அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் என மூன்று வகைப்படுத்தலாம். அமைச்சர் குழு அமைச்சர் என்பவர் ஒரு இலாகாவிற்கோ, ஒன்றிற்கு மேற்பட்ட இலாக்காக்களுக்கோ தலைமை வகிக்கிறார். அமைச்சர்குழு அமைச்சர்கள் அடிக்கடி கூடி முக்கியமான கொள்கை முடிவுகளை எடுக்கிறார்கள். அமைச்சர்குழு என்பது மரபினால் உண்டாக்கப்பட்ட அமைப்பாகும். ஒவ்வொரு துறையின் செயற்பாட்டிற்கும் இராஜாங்க அமைச்சர் பொறுப்பேற்கிறார்,

துணை அமைச்சர்கள் அமைச்சர் : குழு அமைச்சர்கட்கு உதவி செய்கிறார்கள். குறிப்பாக அழைக்கப் பட்டாலன்றி இராஜாங்க அமைச்சர்களும், துணை அமைச்சர்களும்

அமைச்சர்குழுக் கூட்டங்கட்குச் செல்வதில்லை. அமைச்சர்களும் பாராளுமன்ற அலுவல்களைக் கவனிக்கப் பாராளுமன்றச் செயலாளர்கள் (Parliamentary Secretaries) என்போர் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் அமைச்சர் அந்தஸ்து உடையவர்களல்ல.

## இந்தியாவில் அமைச்சர் குழு அமைப்பின் அம்சங்கள்

இந்திய அமைச்சர் குழு அமைப்புச் சில அம்சங்களைப் பெற்றுத் திகழ்கிறது.

- குடியரசுத்தலைவர் பெயரளவிலான தலைவராகவும் பிரதம மந்திரி உண்மையான தலைவராகவும் திகழ்கிறார்கள்.

- குடியரசுத் தலைவர், அமைச்சரவையின் ஆலோசனைப்படி செயல்படுகிறார். எல்லா முக்கியமான முடிவுகளும் அமைச்சரவையால் எடுக்கப்பட்டு பிரதம அமைச்சர் மூலமாகக் குடியரசுத்தலைவருக்குச் சொல்லப்பட வேண்டும் என அரசியலமைப்பின் 78 வது உறுப்புக்கூறுகிறது.

- அமைச்சரவையின் ஆலோசனைப்படிதான் குடியரசுத்தலைவர் செயல்படவேண்டும் என்பதைச் சந்தேகத்திற்கு இடமில்லாமல் அரசியலமைப்பின் 42வது திருத்தம் தெளிவுபடுத்துகிறது:

- எல்லா அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அமைச்சராகப் பதவி ஏற்கும் போது ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக இல்லாவிடில், பதவி ஏற்ற நாளிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் அவர் பாராளுமன்றத்தின் ஏதாவது ஒரு சபையின் உறுப்பினராக ஆக வேண்டும்.

- மக்கள் அவையின் பெரும்பான்மை பலமுள்ள கட்சியைச் சேர்ந்தவர்களே அமைச்சர்கள் 'ஆகிறார்கள்.

- அமைச்சரவை மக்கள்சபைக்குக் கூட்டுப்பொறுப்பு (collective responsibility) உடையதாகத் திகழ்கிறது

- அமைச்சரவைக்கு எதிராக, மக்கள் சபையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அமைச்சரவை பதவி இழக்கும்.

- ஒரு குறிப்பிட்ட அமைச்சரின் நிர்வாகத்திற்கு எதிராகக் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் - அமைச்சரவை இராஜினாமாச் செய்யும்,

- இரகசியக்காப்பு என்பது அமைச்சரவை அரசாங்கமுறையின் மற்றொரு அம்சமாகும். அரசியலமைப்பின் 75(4) வது உறுப்பு ஒவ்வொரு அமைச்சரும் இரகசியக்காப்பு பிரமாணம் எடுத்துக்கொள்ள வகை செய்கிறது. அமைச்சர்கள் பதவி ஏற்கும் போது குடியரசுத்தலைவர் இப்பிரமாணத்தைச் செய்து வைக்கிறார். இதன்படி அரசாங்கக் காரியங்களின் இரகசியத்தை வெளியிடுவதில்லை என்ற உறுதியை அமைச்சர்கள் மேற்கொள்கிறார்கள்.

- அமைச்சர் குழுவின் கூட்டங்களில் அமைச்சர்கள் தங்களின் தனிப்பட்ட கருத்துக்களைத் தெரிவிக்கலாம். ஆனால் அமைச்சர்குழுக்கூட்டத்தில் ஒரு முடிவு மேற்கொள்ளப்பட்டு விட்டால் அமைச்சர்கள் தங்களது தனிப்பட்ட கருத்தை வெளியிடுவது இல்லை.

- பிரதம அமைச்சரின் தலைமை என்பது அடுத்த முக்கியமான அமைச்சரவை அரசாங்கத்தின் அம்சமாகும். இங்கிலாந்தின் பிரதமரைப் போல் இந்தியப் பிரதமரும் அமைச்சர்குழுவின் தலைவராகச் செயல்படுகிறார். பிரதம மந்திரியின் விருப்பப்படி எவரையும் அமைச்சரவையில் சேர்க்கவும், நீக்கவும் செய்யலாம். மற்ற அமைச்சர்களுக்கெல்லாம் வழிகாட்டி போலிருந்து அனைவரும் இணைந்து செயல்பட அவர் வழி செய்கிறார்.

## பணிகளும் அதிகாரங்களும் சட்டமியற்றுதல்

- அமைச்சரவை மசோதாக்களைத் தயார் செய்கிறது.

- ஒவ்வொரு அமைச்சரும் தமது துறை தொடர்பான மசோதாக்களைத் தயாரித்துப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்கிறார்.

- மசோதாக்களின் மீதான விமரிசனங்கட்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர் பதிலளிக்கிறார்.

- அமைச்சர்களால் அறிமுகம் செய்யப்படும் மசோதாக்கள் அரசாங்க மசோதாக்கள் என அறியப்படுகின்றன. அவற்றைப் பாராளுமன்றம் நிறைவேற்றச் செய்வது அமைச்சர்களின் பொறுப்பு.

- அவசரச் - சட்டங்களையும் அமைச்சரவையே வடிக்கிறது.

- பாராளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் நிகழ்த்தும் தொடக்கவுரை அமைச்சர் குழுவினால் தயாரிக்கப்படுகின்றது.

- பாராளுமன்றக் கூட்டத்தொடர் தொடர்பான விஷயங்களிலும் அமைச்சர் குழு முடிவுகளெடுத்து ஜனாதிபதிக்கு அறிவிக்கிறது.

- அமைச்சர்கள் பாராளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டங்களுக்கும் வருகை புரிந்து உறுப்பினர்களின் கேள்விகட்கு விடையளிக்கின்றனர்.

- அமைச்சர்கள் எந்தச் சபையில் உறுப்பினர்காக இருக்கிறார்களோ அந்தச் சபையில் வாக்களிக்கவும் உரிமை பெற்றுள்ளனர்.

## அமைச்சரவை நிருவகித்தல்

- ஒவ்வொரு அமைச்சரும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட துறைகட்குப் பொறுப்பேற்கின்றனர்.

- நிருவாகம் தொடர்பான அனைத்து விஷயங்களிலும் அமைச்சர் குழு முடிவுகளை எடுக்கிறது.
- முக்கியமான பதவிகளுக்கான நியமனங்கட்குப் பெயர்களை ஜனாதிபதிக்கும் பரிந்துரை செய்யும் அதிகாரம் பிரதமருக்கும் அமைச்சர் குழுவிற்கும் உண்டு.
- நாட்டின் வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிப்பதுடன் நிதி தொடர்பான அனைத்து விஷயங்களையும் முடிவு செய்கிறது.
- நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்ய ஜனாதிபதி அமைச்சர்குழுவின் எழுத்து வடிவிலான பரிந்துரையைப் பெற வேண்டும்.

**நீதித்துறை**

- நீதித்துறை தொடர்பான நியமனங்கள் குடியரசுத் தலைவரால் பிரதமரின் ஆலோசனைப்படியே செய்யப்படுகின்றன. பிரதமர் முக்கியமான நியமனங்கள் தொடர்பாக அமைச்சர் குழுவினைக் கலந்து கொண்டே முடிவு செய்கிறார்.
- குற்ற மன்னிப்பு, பொது மன்னிப்பு போன்ற விஷயங்களில் குடியரசுத்தலைவருக்கு அமைச்சர்குழு பரிந்துரை செய்யலாம்.
- சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் அல்லது குற்றங்கள் தொடர்பான நீதிவிசாரணை ஆணையம் அல்லது குழு அமைக்கவும் அதிகாரமுண்டு.

**பிரதமர் நியமனம்**

**நிலை**

இந்தியா ஒரு பாராளுமன்றமுறை அரசாங்கத்தைப் பெற்றுள்ள நாடு. இவ்வமைப்பில் அமைச்சரவை அதிகமான அதிகாரங்களைப் பெற்றுத் திகழ்வது இயல்பு. இந்திய அமைச்சரவையும் சட்டமியற்றுதல், நிருவகித்தல் மற்றும் நீதித்துறை அதிகாரங்களைப் பெற்றுத் திகழ்கிறது. பாராளுமன்ற முறை அரசாங்கத்தை அமைச்சரவை அரசாங்கம் என்றும் அழைப்பதுண்டு. இங்கிலாந்தில் உள்ளது போன்று நிழல் அமைச்சரவை என்ற அமைப்பு எதுவும் இந்தியாவில் இல்லை. ஆனால் மற்ற அம்சங்களில் இந்திய அமைச்சரவை இங்கிலாந்தின் அமைச்சரவையை ஒத்ததாக அமைந்துள்ளது.

**இந்தியப் பிரதமர்**

பிரதம அமைச்சர் பாராளுமன்ற முறை அரசாங்கத்தின் உண்மையான நிருவாகத்துறைத் தலைவராகத் திகழ்கிறார். பிரிட்டனின் அரசியலமைப்பின் அடிப்படையில் இந்திய அரசியலமைப்பும் பாராளுமன்ற முறை அரசாங்கத்திற்கு வகை செய்கிறது. பிரதம மந்திரி பல்வேறு விதமான பங்கினைப் பெற்றுள்ளார்.

**பிரதமர் நியமணம்**

பாராளுமன்றத்தின் கீழ்சபையான மக்களவையின் தேர்தல் முடிவடைந்தவுடன் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களுக்கெனத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். மக்களைவையில் பெரும்பான்மை பெற்றுள்ள கட்சியின் தலைவரை குடியரசுத் தலைவர், பிரதமராக நியமித்து அரசாங்கத்தை அமைக்க அழைக்கிறார். இந்த விஷயத்தில் ஜனாதிபதிக்குச் சுயவிருப்பப்படி செயற்படுகின்ற வாய்ப்புகள் குறைவு. எந்தக் கட்சிக்குமே பெரும்பான்மை இல்லை எனும் நிலை ஏற்பட்டால் பிரதமரை நியமிக்கும் விஷயத்தில் குடியரசுத் தலைவர் ஓரளவு சுயவிருப்பப்படி நடக்கலாம். அண்மைக்காலத்தில் இந்திய மக்களவையில் எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலை உருவாகிவிட்டது. அது போன்ற சமயங்களில் குடியரசுத் தலைவர் நியாய உணர்வுடன் செயற்பட்டு பிரதமரை நியமிக்க வேண்டும். பிரதமராக நியமிக்கப்பட்டவர் மக்களவையில் பெரும்பான்மை ஆதரவு இருக்கும் வரையில் பிரதமராக நீடிக்கிறார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அவர் பதவி இழக்கிறார். புதிய பிரதமரை நியமிக்க குடியரசுத் தலைவர் முயற்சி எடுக்கலாம். மக்களவையில் பெரும்பான்மை பெற எந்தக்கட்சியினாலும் முடியாத பட்சத்தில் குடியரசுத் தலைவர் மக்களவையைக் கலைத்துவிட்டுப் புதிய மக்களவை தேர்ந்தெடுக்கப்பட ஆணையிடலாம். புது மக்களவை தேர்ந்தெடுக்கப்பட்டு புது அமைச்சரவை அமைக்கப்படும் வரையில் ஏற்கனவே பதவியிலிருக்கும் அமைச்சரவையைக் காபந்து அமைச்சரவையாகச் செயற்பட அனுமதிக்கிறார்.

## பிரதம மந்திரியின் பணிகளும் அதிகாரங்களும் அமைச்சர்கள் நியமனம்

### அமைச்சரவை அமைப்பு

பிரதம மந்திரியை நியமனம் செய்தவுடன் குடியரசுத்தலைவரின் பெரும் பொறுப்பு நிறைவு பெறுகிறது. அதன் பின்னர் அவர் பிரதமரின் ஆலோசனைப்படி செயற்படத்தொடங்குகிறார். அமைச்சரவையை உருவாக்குவதில் பிரதமர் கீழ்க்கண்ட அதிகாரங்களை முழுமையாகப் பெற்றுள்ளார்.

- அமைச்சரவையில் எத்தனை அமைச்சர்களை வைத்துக் கொள்வது என்பதை முடிவு செய்கிறார்.
- காபினெட் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் போன்ற அந்தஸ்து வேறுபாடுகளில் எவர் எவருக்கு எந்த அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும் என்பதை அவரே முடிவு செய்கிறார்.
- அமைச்சர்களின் மூப்பு நிலையையும் (Seniority) அவரே முடிவு செய்கிறார். மேற்கூறப்பட்டுள்ள விஷயங்களில் குடியரசுத் தலைவருகு எவ்விதமான பங்கோ பணியோ இல்லை. பொதுவாக அமைச்சரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் சில விஷயங்களைப் பிரதமர் கவனத்தில் கொள்கிறார். பாராளுமன்றத்தில் அனுபவம் பெற்றுள்ள, கட்சியில் மூத்த தலைவர்களாகவும் உள்ள உறுப்பினர்களை காபினெட் அமைச்சர்களாக நியமிக்கிறார். அமைச்சரவையில் எல்லா மாநிலங்கட்கும் ஒன்றியப் பகுதிகட்கும் ஓரளவு பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறதா என்பதையும் பார்க்கிறார்.

## அமைச்சரவையின் தலைவராகப் பிரதமர்

அமைச்சரவையின் தலைவர் பிரதமர், காபினெட் அல்லது அமைச்சர்குழு என அழைக்கப்படும் அமைச்சரவைக்குள் அடங்கிய அமைப்பிற்கும் அவரே தலைவர். இவற்றின் கூட்டங்கட்கு அவர் தலைமை தாங்குகிறார். அமைச்சரவையை ஒரு விளையாட்டுக்குழுவாக எடுத்துக் கொண்டால் பிரதமர் குழுவின் தலைவராக (Caption) அமைகிறார். அமைச்சரவை உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டறிகிறார். அமைச்சர்குழு அல்லது அமைச்சரவைக் கூட்டத்தில் ஒருமித்த கருத்து உருவாக வகை செய்கிறார். அமைச்சர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால் அவற்றைக் களைய முயலுகிறார். அமைச்சர்கட்கு வழிகாட்டியாகவும் செயற்படுகிறார்.

தமது கீழ் பணியாற்றும் அமைச்சர்கள் மீது பிரதமர் முழுமையான கட்டுப்பாட்டு அதிகாரம் பெற்றுள்ளார். தமது விருப்பத்திற்கு மாறாகச் செயற்படுகின்ற அமைச்சர்கள் மீது அவர் மூன்று விதமான நடவடிக்கைகள் எடுக்கலாம்.

- ஓர் அமைச்சர் பொறுப்பு வகிக்கும் துறையை அவரிடமிருந்து எடுத்து விட்டு முக்கியமில்லாத வேறொரு துறையை அளிக்கலாம்
- அமைச்சரவைக் குழுவில் அமைச்சராக உள்ளவரை இணை அமைச்சராகவோ அல்லது துணை அமைச்சராகவோ மாற்றலாம்.
- எந்த அமைச்சரவையும் பதவியை விட்டு நீக்கலாம். பிரதம மந்திரியுடன் மாற்ற முடியாத கருத்து வேறுபாடு கொள்ளும் அமைச்சர் பதவியில் நீடிக்க முடியாது.

## இணைப்புச் சங்கிலியாகப் பிரதம மந்திரி

பிரதமர் குடியரசுத் தலைவருக்கும் அமைச்சரவைக்கும் இடையிலான இணைப்புச்சங்கிலியாகச் செயற்படுகிறார். அமைச்சரவையில் மேற்கொள்ளப்படும் முக்கியமான முடிவுகளை குடியரசுத்தலைவரிடம் தெரியப்படுத்துகிறார். அமைச்சரவையின் முடிவுகளில் எவற்றையேனும் மறு பரிசீலனை செய்யுமாறு குடியரசுத் தலைவர் பிரதமரைக் கேட்டுக் கொள்ளலாம். அவ்வாறு ஜனாதிபதி கூறுகின்ற கருத்துக்களைப் பிரதமர் அமைச்சரவையில் வைத்து விவாதிக்கிறார். இவ்வாறு குடியரசுத் தலைவருக்கும் அமைச்சரவைக்கும் இடையே பிரதமர் இணைப்புச் சங்கிலியாக செயற்படுகிறார்.

## பிரதமரின் நிலை

இங்கிலாந்தில் பிரதமர் பலவாறு விவரிக்கப்படுகிறார். பிரதமர் சூரியனாகவும் பிற அமைச்சர்கள் சூரியனைச் சுற்றி வரும் கோள்களாகவும் வர்ணிக்கப்பட்டனர். பிரதமர் சமமானவர்களுக்குள் முதன்மையானவர் என்ற கருத்தும் சொல்லப்பட்டது. காலப்போக்கில் அமைச்சரவை அரசாங்கம் என்பது தலைமை அமைச்சரைக் கொண்ட அரசாங்கம் என மாறிவிட்டதாக ஆங்கில அரசியலமைப்பை விமரிசனம் செய்வோர் கூறுகின்றனர். இந்தியாவிலும் அத்தகை நிலையேற்பட்டுச் சில மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன.

இந்தியா விடுதலை பெற்றதிலிருந்து இதுவரைப் 14 பிரதமராக பொறுப்பினை வகித்துள்ளனர். 1947 முதல் 1999 வரையிலான 52 ஆண்டுகளில் ஏறத்தாழ 37 ஆண்டுகள் ஜவகர்லால் நேருவும் அவரது சந்ததியினரான இந்திராகாந்தியும் ராஜீவ் காந்தியும் பிரதமர்களாக இருந்துள்ளனர். ஜவகர்லால் நேரு தன்னிகரற்ற தலைவராகத் திகழ்ந்தார். கட்சியிலும் மக்கள் மத்தியிலும் அவரது செல்வாக்குச் சிறப்பாக இருந்தது. பதினழுடே ஆண்டு காலம் பொறுப்பு வகித்த அவர் இந்திய மக்களாட்சியை மழலை நிலையில் கட்டிக்காத்து அதன் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தார். ஏறத்தாழ இருபது மாதங்களே பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரி காங்கிரஸ் கட்சியின் கட்டுப்பாடுகட்கு உட்பட்டவராகவே செயற்பட்டார்.

1966 சனவரியில் இந்திரா காந்தி பிரதமராகும் போது மத்திய அமைச்சரவையில் செய்தித்துறை அமைச்சராக இருந்தார். வயதிலும் அனுபவத்திலும் இளையவராக இருந்த இவர் தொடக்கக் காலத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைமைக்குக் கட்டுப்பட்டு நடந்தார். ஆனால் விரைவிலேயே அவருக்கும் கட்சியின் மூத்த தலைவர்கட்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. தமது முற்போக்குத் திட்டங்களின் வாயிலாகவும் வங்கதேசப் போர் வெற்றியின் காரணமாகவும் மிக அதிகமான மக்கள் செல்வாக்கைப்பெற்ற இந்திராகாந்தி 1975ல் கருத்து முரண் பாட்டுக்கு உள்ளான நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்யப்படக் காரணமானார்.

முதன்முறையாக 1977 ல் மத்தியில் எதிர்க்கட்சி அரசாங்கத்தை அமைத்த மொரார்ஜி தேசாய் தனிப்பட்ட சிறப்பான செல்வாக்கு எதனையும் பெற்றிருக்கவில்லை. அவரது அரசாங்கம் நெருக்கடி நிலைக் காலத்தில் செய்யப்பட்ட பல தவறுகளைச் சீர்செய்யயும் முயற்சிகளை மேற்கொண்டது. ஏறத்தாழ இருபத்தெட்டு மாதங்கள் பதவி வகித்த மொரார்ஜி தேசாய் அமைச்சரவை உட்பூசலால் கவிழ்ந்தது. சரண்சிங் பாராளுமன்றத்தைச் சந்திக்காமலே இராஜினாமாச் செய்தார். 1980ல் மீண்டும் பிரமரான இந்திரா காந்தி துணிச்சலான கொள்கைகளைப் பின்பற்றினார். 1984ல் அக்டோபர் 31 ல் காவலாளிகள் கொலையாளிகளாக மாறி அவர் உயிரைக் குடிக்கும் வரைப் பொறுப்பு வகித்த அவரும் தனது தந்தையைப் போன்று தன்னிகரில்லாத அதிகாரங்களைப் பெற்றிருந்தார்.

இந்திரா காந்தியின் மரணத்தால் திடீரெனப் பிரதமர் பொறுப்பை யேற்ற ராஜீவ் காந்தி ஐந்து ஆண்டுகள் கட்சியைத் தமது கட்டுப்பாட்டில், வைத்துக்கொண்டு செல்வாக்குடன் ஆட்சி செய்தார். 1989ல் ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் தோல்வியுற்று மீண்டும் எதிர்க்கட்சி ஆட்சி ஏற்பட்டது. V.P: சிங் மற்றும் சந்திரசேகர் ஆகியோர் ஒன்றரை ஆண்டுகளே பிரதமர்களாக இருந்தனர். 1991ல் சிறுபான்மை அரசாங்கத்தைத் தொடங்கிய பிரதமர் நரசிம்மராவ் தனது கட்சியின் பலத்தை மக்களவையில் பெருக்கிக் கொண்டு ஐந்தாண்டுகள் ஆட்சியில் சமாளித்தார். 1996 தேர்தல்களைத் தொடர்ந்து வாயஜ்பாயி தேவகௌடா மற்றும் I.K. குஜ்ரால் எனக் குறுகியகாலப் பிரதமர்களை நாடு சந்தித்தது. 1998 மார்ச் 19ல் ஒரு கூட்டணி அரசாங்கத்திற்குத் தலைமையேற்றுப் பிரதமரானார் வாஜ்பாயி. பதின் மூன்று மாதங்களுக்குள் அந்த அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது. 1999 செப்டம்பர் அக்டோபரில் நடந்த மக்களவைத் தேர்தல்களில் பாதிய ஜனதா கட்சியினர் தலைமையிலான கூட்டணி வசதியான பெரும்பான்மை பெற்று வாஜ்பாயி மீண்டும் பிரதமராகியுள்ளார்.

எந்தவொரு தனிக்கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை பெற முடியாத நிலை கடந்த பத்து ஆண்டுகளாக நிலவி வருகிறது. 1989 முதல் 1999 வரை பத்தாண்டுகளில் ஐந்து முறை மக்களவைத் தேர்தல்கள் நடந்து ஏழு பிரதமர்கள் பதவி வகித்துள்ளனர். 1999 முதல் 2004 வரை வாஜ்பாயும் ,2004 முதல் 14 வரை மன்மோகன் சிங்கும், 2014 முதல் நரேந்திர மோடி பிரதமராக பதவி வகித்து வருகிறார்.

## பிரதமர் அலுவலகம்

பிரதமர் அலுவலகம் 1947 ஆகஸ்ட் முதல் செயல்பாட்டிற்கு வந்தது. முதலில் இது பிரமரின் செயலகம் என அழைக்கப்பட்டது ஆனால் 1977 முதல் பிரதமர் அலுவலகம் என பெயர் மாற்றப்பட்டது. இது இந்திய அரசாங்கப் பணி விதிகள் 1961ன் படி இந்திய அரசின் ஒரு துறையாக பட்டியலிடப்பட்டது. இது ஏதும் தனி அலுவலகத்தையோ எதனையும் பெற்றிருக்கவில்லை. இவ்வலுவலகம் பிரதமருக்கும் அவரது அமைச்சர் , குடியரசுத் தலைவர், ஆளுனர் , மாநில முதலமைச்சர்கள் , அயல்நாட்டு பிரதிநிதிகள் ஆகியோருடன் ஒரு இனைப்பு பாலமாக செயல்படும். மற்றொரு புறம் தனிப்பட்ட தொடர்புகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகளையும் பெறுகிறது.

## பிரதமர் அலுவலகத்தின் பணிகள்

- பிரதமரின் அதிகாரத்திற்கு கீழ் வரும் அலுவல்கள் தொடர்பான பணியை மேற்கொள்ளுதல்
- பிரதமருடையை ஒட்டுமொத்த பணியையும் மேற்கொள்வதில் துனைபுரிதல்
- பிரதமருடன் தொடர்புடைய அமைச்சரவை மற்றும் மானில அரசு பிற விருப்பட்ட பணிகளை மேற்கொள்ளுதல்
- மத்திய கொள்கைக் குழுவின் தலைவராக அவரது பணிகளை மேற்கொள்ளுதல்
- பொதுமக்களுடன் தொடர்பில் இருந்து கோரிக்கைகளை கேட்டறிதல்

**பிரதமர் அலுவலத்தின் அதிகாரவர்க்க படி நிலைகள்**

முதன்மைச் செயலாளார்: பிரதமர் அலுவலகத்தின் அதிகாரவர்க்கத்தின் தலைமையாக செயல்படுகிறார் மேலும் பிரதமர் அலுவலக கோப்புகளை கையாளுதல். பிரதமர் ஏதேனும் அமைச்சக பணிகளை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொண்டால் அப்பணிகளை செய்தல்

கூடுதல் செயலாளார்: பிரதமரின் தனிப்பட்ட மற்றும் அமைச்சரவை தொடர்பான கொள்கைகளையும் பிரதமர் கேட்டுக்கொண்டால் கவனிப்பார்.

இனைச்செயலாளர் 1 : உள்துறை , சட்டம் மற்றும் நீதித்துறையை பிரதமரின் சார்பாக கவனித்தல்

இனைச்செயலாளர் 2 : பிரதமர் அலுவலகத்தின் நிர்வாகம் மற்றும் சாலை , ரயில், விமானப்போக்குவரத்து தகவல் தொடர்பு ஆகிய துறைகளை கவனித்தல்

இணைச்செயலாளர் 3 : வெளியுறவுத்துறை, பாதுகாப்பு,அணுசக்தி துறை ஆகியவற்றை கவனித்தல்

இயக்குனர் 1 : சிறப்பு பணியில் இருக்கும் இவர் ஊரக மேம்பாடு மற்று உணவு வழங்கலைக் கவனிக்கிறார்

இயக்குனர் 2 : உள்துறை தொடர்பானவற்றிற்கு பொறுப்பாவார்

இயக்குனர் 3 : இவர் தனித்த ஒரு இயக்குனர் இவருக்கு எந்த வித நிர்ணயிக்கப்பட்ட பொறுப்பு ஏதும் கிடையாது நெருக்கடி நேரங்களில் சில பணிகளை மேற்கொள்வார்.

இயக்குனர் 4: இவர் பிரதமர் அலுவலகத்தில் பல்வேறு பணிகள் பல்வேறு மாநில அரசுகளோடு தொடர்பில் இருப்பது மற்றும் குறிப்பாக வடகிழக்கு மாநிலங்களோடு தொடர்பில் இருப்பது.

## அமைச்சரவைச் செயலாளர்

அமைச்சரவைச் செயலாளர் அமைச்சரவைச் செயலகத்தின் தலைவர் ஆவார். அமைச்சரவைக் கூட்டங்களில் பிரதமருக்கு வலது பக்கம் இருப்பார். அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் போது பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்கு தேவையான தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்கள் ஆகியவற்றை வழங்குவது. அமைச்சரவைக் கூட்டங்களில் அமைதியாக நிகழ்வுகளைக் கவனிப்பது மற்றும் குறிப்புகள் எடுப்பது இவரது பணியாகும்.

அமைச்சரவை செயலாளர் பதவியானடு சுதந்திரத்திற்கு பின்பு உருவாக்கப்பட்ட முக்கியப் பணியாகும் ஆனால் இங்கிலாந்தைப் பொறுத்தவரை 1916லியே இவ்வகை அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்திய அரசியலமைப்பைப் பொறுத்தவரை அமைச்சரவைச் செயலாளர் பதவியைப் பற்றிய எந்த ஒரு குறிப்பும் காணப்படவில்லை ஆனாலும் அமைச்சரவைச் செயலாளரின் பதவியானது பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் வைசிராயின் செயலகத்தின் தொடர்ச்சியாகவே கருதப்படுகிறது.சுதந்திரத்திற்குப் பின் அமைக்கப்பட்ட நிர்வாக சீர்திருத்தக் குழுவானது அமைச்சரவைச் செயலாளரின் பதவியின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு பொது நிர்வாகத்தில் இந்தப் பதவியை உருவாக்க வேண்டும் என பரிந்துரை செய்தது. மேலும் இந்தப் பதவியை வெளிப்படையாக திறந்த நிலையில் அனைத்து திறமையான செயலாளர்கள் இப்பதவியின் போட்டிக்களத்தில் இருக்க வேண்டும் எனவும் கூறியது.

1949 ஆம் ஆண்டு கோபாலசுவாமி ஐயங்கார் நிர்வாக சீர்திருத்தக் குழு திறமை வாய்ந்த பல்வேறு துறை அதிகாரிகளை கொண்ட சிறிய துறைகளைக் கொண்ட குழுவாக அமைக்க வேண்டுமென பரிந்துரைத்தது பின்னாளில் இதுவே அமைச்சரவைச் செயலகம் ஆனது.இவ்வலுவகத்தை நிர்வகிக்கவே அமைச்சரவைச் செயலாளர் பதவி உருவானது. 1950 ஆம் ஆண்டு என் ஆர் பிள்ளை முதல் அமைச்சரவைச் செயலாளர் ஆனார்.

அமைச்சரவைச் செயலாளர் பதவியெண்பது ஐ ஏ எஸ் அதிகாரிகளிலெயே மிக உயரிய பணி ஆகும். தகுதியிலும் அனுபவத்திலும் மூத்த ஐ ஏ எஸ் அதிகாரிதான் அமைச்சரவைச் செயலாளராக நியமிக்கப்படுவது மரபு.

அமைச்சரவை செயலகம் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. உள் நாட்டு பிரிவு, இராணுவப் பிரிவு, நுண்ணறிவுப் பிறிவு என்றவற்றைக் கொண்டுள்ளது.

**அமைச்சரவைச் செயலகத்தின் பணிகள்**

- அமைச்சரவைக் கூட்டத்திற்கு தேவையான குறிப்புகள் மற்றும் தகவல்களை வழங்குதல்
- அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் மற்றும் கோப்புக்களைப் பாதுகாத்தல் மற்றும் அது தொடர்பான அமைச்சகங்கள் , மானில அரசுகளுக்கு சுற்றறிக்கை அனுப்புதல்
- அமைச்சரவைக் குழுக்களுக்கு தேவையான செயலக உதவி அளித்தல்
- குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், மற்றும் மத்திய அமைச்சரவைகளுக்கு மத்திய அரசின் செயல்பாடுகளை தெரிவித்தல்
- இச்செயலகம் இந்திய அரசின் அலுவல்கள் மற்றும் பல்வேறு அமைச்சகத்தின் அலுவல்களை குடியரசுத் தலைவரின் அனுமதியுடன் வரன்முறை மற்றும் ஒதுக்கீடு செய்தல்
- மத்திய அரசின் முதன்மை ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுவது மேலும் பல்வேறு அமைச்சகங்களுக்கிடையே முரண்பாடுகள் எழுந்தால் அவற்றை சமரசம் செய்வது
- அமைச்சரவையால் எடுக்கப்படும் பல்வேறு முடிவுகள் செயல்படுத்தப்படுகின்றனவா என கண்காணித்தல்

**அமைச்சரவைச் செயலரின் பணிகள் மற்றும் அதிகாரங்கள்**

- மத்திய அரசு நிர்வாகத்தின் முதன்மை ஒருங்கிணைப்பாளராக செயல்படுகிறார் ஆனால் பல்வேறு துறைகளை மேற்பார்வை செய்பவரல்ல
- இணைச் செயலளார் அந்தஸ்துக்கு மேல் உள்ள பணிகளுக்கு தகுதியான நபர்களை தேர்ந்தெடுக்கும் முது நிலை பணி நியமனக் குழுவின் தலைவராக இருத்தல்
- அமைச்சரவைக் குழுவின் செயலாளரும் இவர்தான். அமைச்சரவைக் குழு கூட்டங்களைத் திட்டமிடுவதும், அந்தக் கூட்டத்தின் இடம் மற்றும் நிகழ்ச்சி நிரல்களைத் திட்டமிடுவதும் செயலாளரின் பொறுப்பு. அரசு விவகாரங்கள்

தொடர்பான அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை நிர்வகிக்கும் அதிகாரமும் இந்தப் பதவிக்கு உண்டு.

- அமைச்சரவை செயலகத்தின் நிர்வாகப் பணிகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும், யார் யாருக்கு எந்த பொருப்பு என்று ஒதுக்கீடு செய்வதற்கும் செயலாளருக்கே அதிகாரம் உண்டு.

- எந்தவொரு நெருக்கடி, அசாதாரண சூழ்நிலையிலும் அரசின் பக்கம் நின்று, அவசியமாக எடுக்க வேண்டிய முடிவுகளுக்கான ஆலோசனை தர வேண்டியது செயலாளருடைய பொறுப்பு.

- அமைச்சரவை உபகுழுக்களினதும் அமைச்சரவையினதும் கூட்டங்களுக்கு தேவையான சகல சேவைகளையும் வழங்குதல்.

- முக்கியமான அமைச்சரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக தொடர் நடவடிக்கைகளை எடுத்தல்

- பிரதமர் அலுவலகத்திற்கும் பல்வேறு அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசியல் முறைகளுக்கும் ஒரு இணைப்புச் சங்கிலியாக செயல்படுவது.

குருப் 1 மற்றும் 2 முதல் நிலைத்தேர்வு - சேர்க்கை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது

# இந்திய வரலாறு - பழங்கால இந்தியா - 1

## ஹரப்பா - சிந்து சமவெளி நாகரிகம்

- ✓ இதன் மிகப்பழமையான பெயர் சிந்து நாகரிகம்

- ✓ தொல்பொருள் பாரம்பரியத்தின் படி மிகப்பொருத்தமான பெயர் ஹராப்பா நாகரிகம் ( ஹராப்பா முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இடம்)

- ✓ புவியியல் அடிப்படையில் பார்த்தோமானால் மிகப்பொருத்தமான பெயர் ஸ்ரீ சிந்து ஸ்ரீ சரஸ்வதி நாகரிகம் ( கண்டுபிடிக்கப்பட்ட பெரும்பான்மையான இடங்களில் 80 % இடங்கள் இந்த இரண்டு நதிப்புறங்களில் காணப்படுகிறது)

- ✓ பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட காலம் - கி.மு 2500 முதல் கி.மு 1750 ( கார்பன் தேதியிடுதலின்படி)

- ✓ 1931 ஆம் ஆண்டு சர்ஜான் மார்ஷல் மொகஞ்சாதாரோவின் காலத்தை கி.மு. 3250 - கி.மு. 2750 என மதிப்பிட்டார்.

- ✓ 1956 ஆம் ஆண்டு ஃபேர்சர்வ்ஸ் என்பவர் ஹரப்பா பண்பாட்டின் காலத்தை கி.மு.2000 - கி.மு. 1500 என்று மதிப்பிட்டார். 1964 ஆம் ஆண்டு டி.பி. அகர்வால் இந்த பண்பாட்டின் காலத்தை கி.மு. 2300 கி.மு. 1750 என முடிவு செய்தார்.

- ✓ சிந்து சமவெளி நாகரிகம் என முதன்முதலில் வார்த்தையை பிரகடனப்படுத்தியவர் சர் ஜான் மார்ஷல் என்ற அறிஞர்.
- ✓ சிந்து சமவெளி நாகரிகம் செம்புக்கால கட்டத்தைச் சார்ந்தது
- ✓ சிந்து சமவெளி நாகரிகம், சிந்து , பலுசிஸ்தான், பஞ்சாப், ஹரியானா,ராஜஸ்தான், குஜராத், மேற்கு உத்திரப்பிரதேசம் மற்றும் வடக்கு மகாராஷ்ட்ரா ஆகிய பகுதிகளில் பரவி இருந்தது.
- ✓ பொதுவாக வரலாற்று அறிஞர்கள் ஹரப்பா ஸ்ரீ காக்கர் ஸ்ரீ மொகஞ்சதரோ பகுதியே மிக முக்கியமான பகுதியாக கருதுகின்றனர்.
- ✓ இந்த நாகரிகம் வடக்கில் ரோப்பர் ( சட்லஜ்) பஞ்சாப், மந்தா ( ஜினாப்) ஜம்மு காஷ்மீர் ( தற்போது ) வரையும் , தெற்கில் பகத்ரவ் ( குஜராத்) , தாய்மாபாத் ( மகாராஷ்ட்ரா )வரையிலும் , கிழக்கில் ஆலம்கீர்பூர் ( உத்திரப்பிரதேசம்) , மேற்கில் சுத்காஜெந்தர் ( பாகிஸ்தான் –ஈரான் ) எல்லை வரைய பரவியிருந்தது
- ✓ முக்கிய நகரங்களாக ஹரப்பா மற்றும் மொகஞ்சதரோ விளங்கியது
- ✓ துறைமுக நகரங்கள் – லோத்தல் ,சுத்காஜெந்தர்,ஆலாஹிதினோ,பாலகோட், குண்டாசி

| இடம் | ஆற்றுப் படுகை | மாநிலம் | நாடு | கண்டுபிடித்தவர்கள் |
|---|---|---|---|---|
| ஹரப்பா | ராவி | பஞ்சாப் | பாகிஸ் தான் | தயராம் சஹானி (1921),மதொ ஸ்வருப் வாத்சா(1926),வீலர் (1946) |
| மொகஞ்சத ரோ | சிந்து | சிந்து | பாகிஸ் தான் | ஆர்.டி பானர்ஜி(1922),மக்கே(1927), வீலர் (1930) |
| சான்ஹூதா ரோ | சிந்து | சிந்து | பாகிஸ் தான் | மக்கே (1925), என்.ஜி மஜீம்தார் (1931), எஸ்.ஆர் ராவோ (1954) |
| லோத்தல் | போகா வா | குஜராத் | இந்தி யா | எஸ்.ஆர் ராவோ ( 1954) |
| காளிபங்க ன் | காக்கர் | ராஜஸ் தான் | இந்தி யா | அமலானந்த் கோஷ் (1951) , பி.வி லால் மற்றும் பி.கே தாபர் ( 1961) |
| பன்வாலி | காக்கர் | ஹரியா னா | இந்தி யா | ஆர்.எஸ் பிஸ்ட் (1973) |

| | | | | |
|---|---|---|---|---|
| தோலவீரா | லூனி | குஜராத் | இந்தியா | ஜே.பி ஜோஷி ( 1967) |

| இடம் | தொல்பொருள் கண்டுபிடிப்புகள் |
|---|---|
| ஹரப்பா | ஆறு தானியக்களஞ்சியங்கள் தொடர்ச்சியாக, வேலைசெய்யும் தரை, தொழிலாளர்கள் தங்குமிடம் , கன்னி பெண் தெய்வம், இடுகாடு, லிங்க குறியீடுகளை கொண்ட கற்கள், பெண் உறுப்பு , சாயம் பூசப்பட்ட பானைகள்,பெண் தெய்வங்களின் களிமன் சிலைகள்,கோதுமை மற்றும் பார்லியைக் கொண்ட மரப்பலகை , செம்பு அளவுகோள், வெண்கல கோப்பை, செம்பு உலோகத்தால் செய்யப்பட்ட கண்ணாடி, கூடை, பகடை |
| மொகஞ்சதரோ | பெரும் தானியக்களஞ்சியம் ( இந்த நாகரிகத்தில் காணப்பட்ட மிகப்பெரிய கட்டிட அமைப்பு), பெரும் குளியல் குளம், பொதுமக்கள் கூடும் சபை, கிளிஞ்சல் சோடிகள் , பசுபதி மகாதேவா , நடனமாடும் நாட்டிய மங்கையின் நிர்வான வெண்கலச் சிலை,தாடிவைத்த மனிதனி படம்,சாயம் பூசப்பட்ட முத்திரைகள்,பெண் தெய்வங்களின் களிமன் பொருட்கள், நெய்யப்பட்ட பருத்தி துணி, செங்கற்சூளை, 2 மெசபடோமிய முத்திரைகள்,பகடை |
| சான்ஹீதரோ | சிட்டாடல் இல்லாமல் காணப்பட்ட நகரம்,மைப் பானை, உதட்டுச்சாயம், உலோக வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள்,கிளிஞ்சல்களால் ஆபரணம் தயாரிப்பவர்கள் மற்றும் மணிகள் உருவாக்ககூடியவர்கள், செங்கலில் பதிவான நாயின் உருவம், களிமன்னால் உருவாக்கப்பட்ட காளை வண்டி, வெண்கல பொம்மை வண்டி |
| லோத்தல் | துறைமுகம், நெல் வைத்திருந்த இடம், கிளிஞ்சல்களால் ஆபரணம் தயாரிப்பவர்கள் மற்றும் மணிகள் உருவாக்ககூடியவர்கள், தீ அனைப்பான்கள், குதிரையின் சுடுமண் உருவம்,இரட்டை எரித்தல் ( இறந்த ஆண் மற்றும் பெண்ணை ( ஜோடியாக) ஒரே கல்லறையில் வைத்து தீ மூட்டுதல் ) கப்பலின் சுடுமன் உருவம் , சாயம் பூசப்பட்ட பானை, ஈரானிய , பெர்சிய முத்திரைகள் மற்றும் சாயம் பூசப்பட்ட குவளை ( பறவை மற்றும் நரி) |
| காளிபங்கன் | நிலம் உழப்பட்டதற்கான தடையம், ஏழு தீ அனைப்பாகள் , சுவடிக்கப்பட்ட செங்கல்கள் , பொம்மை வண்டியின் உருளைகள் , மெசப்பட்டோமிய கூம்பு வடிவ முத்திரைகள் |
| தோலவீரா | ஒரு தனித்துவமான நீர் சேகரிப்பு முரை மற்றும் கழிவு நீர் முறை,மிகப்பெரிய கிணறு மற்றும் குளியல், ஒரு அரங்கம் |

- ✓ மொகஞ்சதரோ சிந்து சமவெளியில் காணப்பட்ட மிகப்பெரிய நகரம், ராகிகார்கி தற்போது இந்தியாவில் உள்ள சிந்து சமவெளி இடங்களில் மிகப்பெரிய இடம்

**நகரங்களுக்கிடையே காணப்பட்ட பொதுவான அம்சங்கள்**

- ✓ முறையாக திட்டமிடப்பட்ட நகர அமைப்பு கட்டங்கள் ,
- ✓ கட்டிடங்களுக்கு சுட்ட செங்கல்களை பயன்படுத்தியது
- ✓ நிலத்தடி கழிவு நீர் வாய்க்கால்கள்
- ✓ பெரும் தானியக் களஞ்சியம் , குளியல் அறைகள்
- ✓ சுர்கோதடா - சிந்து சமவெளி நாகரிகத்திலேயே குதிரை கானப்பட்டது இங்கேதான்.

**முக்கியப்பயிர்கள்**

- ✓ கோதுமை, பார்லி , நெல் பயிரிடப்பட்டதற்கான தடையம் லோத்தல் மற்றும் ராங்க்பூர், எள், கடுகு, பருத்தி, பேரிச்சை போன்றவையும் பயிரிடப்பட்டன.உலகிலேயே முதல் முறையாக பருத்தி பயிரிட்டவர்கள் சிந்து சம்வெளி மக்கள்

**விலங்குகள்**

- ✓ செம்மறியாடு, வெள்ளாடு, கொம்புடைய மற்றும் கொம்பில்லாத எருது, எருமை, காட்டுப்பன்றி, நாய், பூனை,காட்டுக்கோழி, மான், ஆமை, யானை, ஒட்டகம், ரினோசர்ஸ், புலி ஆகியவை கானப்பட்டன. சிந்து சமவெளி மக்கள் சிங்கம் பற்றி அறிந்திருக்கவில்லை.

**வர்த்தகம்**

- ✓ ஆப்கானிஸ்தான், ஈரான் போன்ற பகுதிகளோடு அயல்நாட்டு வர்த்தகமும் நடைபெற்றது.
- ✓ தங்கம், செம்பு, ஈயம் மற்றும் அரிய வகை கற்கள் இறக்குமதி செய்யப்பட்டன.
- ✓ கோதுமை, பார்லி, பயிறுவகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்ற வேளாண் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.
- ✓ பருத்தியாடைகள், மட்பாண்டங்கள், மணிகள், சுடுமண் கலைப்பொருட்கள், தந்த வேலைப்பாடுகள் போன்றவையும் ஏற்றுமதிகளில் அடங்கும்.
- ✓ சிந்துப்பகுதிக்கும் சுமேரியாவுக்கும் இடையே வாணிகத்தொடர்பு நிலவியதற்கு போதிய சான்றுகள் கிடைத்துள்ளன. மெசபடோமியாவில் சிந்துவெளியைச் சார்ந்த பல முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

- ✓ நாணயங்கள் பயன்படுத்தியது தொடர்பான தகவல்கள் இல்லை. பண்டமாற்று வாணிகமே பரவலாக நடைபெற்றது.
- ✓ சிந்து சமவெளி மக்கள் இரும்பினை அறிந்திருக்கவில்லை
- ✓ சுமேரிய நூல்கள் சிந்து சமவெளியுடன் வர்த்தகம் நடைபெற்றதை தெரிவிக்கும் பொருட்டு சிந்து சமவெளி பகுதிக்கு மெலுகா என அழைத்தனர்
- ✓ சிந்து சமவெளி நாகரிகம் பொதுவாக நகர நாகரிகத்தைக் கொண்டிருந்தது.

| இறக்குமதி | பெறப்பட்ட இடம் |
|---|---|
| தங்கம் | கோலார் ( கர்னாடாக) , ஆப்கானிஸ்தான், ஈரான் |
| வெள்ளி | ஆப்கானிஸ்தான், ஈரான், தென் இந்தியா |
| செம்பு | கேத்திரி( ராஜஸ்தான்), பலுசிஸ்தான், அரேபியா |
| தகரம் | ஆப்கானிஸ்தான், பிகார் |

**நிர்வாகம் மற்றும் சமூக நிலைமை**

- ✓ எந்த ஒரு அரசியலமைப்பு நிர்வாக முறை காணப்பட்டதற்கான தடையக்கள் காணப்படவிலை. பொதுவாக பார்க்கும் போது வணிகர்கள் ஆட்சி செய்தவாறு புலப்படுகிறது
- ✓ அவர்களது முக்கிய ஆண் கடவுள் பசுபதி (முற்காலத்திய சிவன்). தியானவடிவில் அமர்ந்திருக்கும் அவருக்கு மூன்று முகங்களும் இரண்டு கொம்புகளும் காணப்படுகின்றன. நான்கு விலங்குகள் (யானை, புலி, நீர்யானை, எருது) வெவ்வேறு திசைகளைப்பார்த்த வண்ணம் அவரை சூழ்ந்துள்ளன. அவரது பாதத்தில் இரண்டு மான்கள் உள்ளன. இந்த உருவம் முத்திரைகளில் காணப்படுகிறது.
- ✓ அவர்களது முக்கிய பெண் கடவுள் தாய்க் கடவுளாகும். இதன் சுடுமண் வடிவங்கள் கிடைக்கின்றன.
- ✓ பிற்காலத்தில் லிங்க வழிபாடும் காணப்பட்டது. ஹரப்பா மக்கள் மரங்களையும் விலங்குகளையும் கூட வழிபட்டனர்.
- ✓ பேய்கள், கெட்ட ஆவிகள் போன்றவற்றின்மீது நம்பிக்கை கொண்டிருந்த அவர்கள், தங்களைப் பாதுகாத்துக் கொள்ள தாயத்துக்களையும் அணிந்தனர்.
- ✓ ஹரப்பா எழுத்து வடிவம் இன்னும் முழுமையாக கண்டறியப்படவில்லை. 400 முதல் 600 வரையிலான வடிவங்கள் இருப்பினும், அவற்றில் 40 அல்லது 60 மட்டுமே அடிப்படையாக விளங்குகின்றன. எஞ்சியவை அவற்றின் மாற்றுவடிவங்களே.

- ✓ கான்டிநேவியாவைச் சேர்ந்த பார்போலா மற்றும் அவரது உடன்பணியாற்றும் அறிஞர்களும் ஹரப்பா மக்களின் மொழி திராவிடமொழியே என்று முடிவு செய்துள்ளனர். சோவியத் அறிஞர் சிலரும் இக்கருத்தை ஏற்கின்றனர்.

**முடிவான தகவல்கள்**

- ✓ ஹரப்பா பண்பாட்டின் அழிவு குறித்து பொதுவாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. வெள்ளப் பெருக்கு, நதிகள் வறண்டுபோடுதல், விளைநிலம் தனது வளத்தை இழத்தல், அவ்வப்போது ஏற்படும் நிலநடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஹரப்பா நகரங்களின் அழிவுக்கு காரணங்களாக இருந்திருக்கக்கூடும்.
- ✓ ஆரியர்களின் வருகையும் சிந்து சமவெளியின் அழிவுக்கு காரணமாக இருக்கும் என கருதப்படுகிறது
- ✓ மொகஞ்சாதோராவில் கண்டெடுக்கப் பட்டுள்ள மனித எலும்புக்குவியல் அந்நகரம் அயலவரின் படையெடுப்புக்கு ஆளானதை வெளிப்படுத்துவதாக உள்ளது.
- ✓ பெரும்பாலான அறிஞர்கள் சிந்து சம்வெளி நாகரிகத்தை உருவாக்கியவர்கள் திராவிடர்கள் என உறுதியாக நம்புகின்றனர்.
- ✓ சிந்து சம்வெளியின் சம காலத்திய நாகரிகமாக, மெசபடோமியா, எகிப்து, சீனா ஆகும்.

## கருணைக் கொலை உச்ச நீதிமன்ற தீர்ப்பு

கருணைக்கொலையை அனுமதிக்கக் கோரி ‘காமன் காஸ்’ என்ற தன்னார்வ அமைப்பு கடந்த 2005ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தது. ‘நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டவர்கள் குணமடைய வழியில்லாத நிலையில், மருத்துவமனையில் அவர்களுடைய சுவாசக் கருவிகளை அகற்றி கருணைக்கொலை செய்யும் நடைமுறை பல நாடுகளில் இருக்கிறது. அரசியல் சட்டத்தின் 21வது பிரிவு வாழ்வதற்கு மட்டுமின்றி சாவதற்கும் உரிமை வழங்கியிருப்பதால், கருணைக்கொலைக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும்’ என அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பில் தீர்க்கமுடியாத அல்லது மீளமுடியாத நோய்த்தாக்கத்தில் இருப்பவர்களை, மருத்துவ உபகரணங்களை அகற்றுவதன் மூலம் கருணைக்கொலை செய்யலாம் என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். அதாவது, தீராத நோய் உள்ளவர்கள், நலம் பெற வழியில்லாதவர்களை சில விதிகளுக்கு உட்பட்டு மரணிக்க அனுமதிக்கலாம் மற்றும் செயற்கை உயிர்காக்கும் முறைகளைக் கைவிட்டு உயிர்துறக்கச் செய்யலாம் என தீர்ப்பளித்துள்ளனர்.

### கருணைக் கொலை என்றால் என்ன?

சக உயிரின் மீது கருணையற்றவர்களால் நிகழ்த்தப்படுவதுதான் கொலை. ஓர் உயிரின் மீதான கருணையின் காரணமாகவும் கொலை புரியலாம் என்கிற கருத்தைக் கொண்டது ‘கருணைக் கொலை’.

தீர்க்க முடியாத நோய், தாங்க முடியாத வலி, மீண்டு வர இயலாத மூளை செயலிழப்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களைக் கருணைக் கொலை செய்ய அனுமதிக்க வேண்டும் என்கிற கோரிக்கை நெடுங்காலமாகவே எழுப்பப்பட்டு வருகிறது.

'கருணைக்கொலையை **(Mercy killing)** நல்மரணம் **(Euthanasia)** என்று குறிப்பிடுகின்றனர். நேரடி நல்மரணம் **(Active Euthanasia)**, சாத்விக நல்மரணம் **(Passive euthanasia)** என இது இருவகைப்படும். மரணத்தை ஏற்படுத்தும் மருந்தை ஊசியின் வாயிலாகச் செலுத்தி உயிரைப் போக்குவது நேரடி நல்மரணம். உயிர் வாழ்வதற்கான உபகரணங்களை அகற்றி விடுவதன் மூலம் மரணத்தை ஏற்படுத்துவது சாத்விக நல்மரணம்.

இது பாதிக்கப்பட்டவரே நல் மரணத்துக்கு ஆட்படுத்தும்படி விரும்பிக் கேட்பது **(voluntary)**, அவரது உறவினர்கள், நண்பர்கள் கேட்பது **(involuntary)** என இருவகைப்படுகிறது. உலக அளவில் புற்றுநோய், **Amyotrophic Lateral Sclerosis, Chronic Obstructive Pulmonary Disease** என இம்மூன்று நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காகத்தான் பெரும்பாலும் கருணைக் கொலைக்கான கோரிக்கைகள் எழுப்பப்படுகின்றன.

கருணைக் கொலையை அவர்கள் **Physician Assisted Suicide** - அதாவது மருத்துவரின் வழிகாட்டுதலின் பேரில் நிகழ்த்தப்படும் தற்கொலை என்று குறிப்பிடுகிறார்கள். மரணத்தை ஏற்படுத்தும் மருந்துகளை பாதிக்கப்பட்டவரே உட்கொண்டு இறக்கும்படியான சூழலை உருவாக்கிக் கொடுக்கின்றனர். இயலாதவர்களுக்கு கார்பன் மோனாக்சைடு வாயுவைச் செலுத்துவதன் மூலம் மரணத்தை ஏற்படுத்தலாம். வலி இல்லாத மரணம் என்பதுதான் கருணைக் கொலையின் முக்கிய நோக்கமாக இருக்கிறது.

**கருணைக்கொலை ஏன் வேண்டும்?**

- ✓ உளவியல் ரீதியாகப் பார்த்தால் கருணைக் கொலைக்கான தேவை இருக்கிறது. வலி மற்றும் உடல் அவர்களது கட்டுப்பாட்டில் இல்லை என்கிற உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள்தான் கருணைக்கொலை செய்யச் சொல்லிக் கேட்கிறார்கள். மீண்டு வர இயலாத மூளைச் செயலிழப்புக்குச் சென்றவர்களை பராமரிப்பதில் பொருளாதார ரீதியிலான சவால்களை எதிர்கொள்ள நேரிடுகிறது.

- ✓ உளவியல் ரீதியாகப் பார்த்தால் கருணைக் கொலைக்கான தேவை இருக்கிறது. வலி மற்றும் உடல் அவர்களது கட்டுப்பாட்டில் இல்லை என்கிற உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள்தான் கருணைக்கொலை செய்யச் சொல்லிக் கேட்கிறார்கள். மீண்டு வர இயலாத மூளைச் செயலிழப்புக்குச் சென்றவர்களை பராமரிப்பதில் பொருளாதார ரீதியிலான சவால்களை எதிர்கொள்ள நேரிடுகிறது.

- ✓ மருத்துவம் தனியார்மயமாகி விட்ட சூழல் ஏழை மக்களுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்துகிறது. ஒட்டுமொத்தக் குடும்ப வருமானமும் மருத்துவத்துக்கே செலவு செய்யப்படுவதால் மற்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் போகிறது. இப்படியொரு நெருக்கடியான சூழலில்

பாதிக்கப்பட்டவர் மனதளவில் தான் யாருக்கும் பாரமாக இருக்க வேண்டாம் என்கிற முடிவுக்குள் வருகிறார்.

- ✓ கருணைக் கொலை சட்டப்பூர்வமாக்கப்படவில்லை என்றாலும், இன்றைக்கு நிறைய கிராமப்புறங்களில் முதியவர்கள் கருணைக்கொலை செய்யப்பட்டுதான் வருகிறார்கள். பன்றிக்கறி உண்ணக்கொடுத்தல், நல்லெண்ணெயை தடவி குளிர்ந்த நீரால் குளிப்பாட்டுதல் என உடலைக் குளிர்வித்து மரணமடையச் செய்யும் பழக்கம் இன்றைக்கு பரவலாக இருக்கிறது.
- ✓ உயிர் வாழ்தலுக்கான உரிமை எல்லோருக்கும் இருக்கிறது. அது போல் தன்னால் வாழ இயலாத வாழ்க்கையிலிருந்து கன்னியமாக சுதந்திரமாக விடுதலை பெறுவதும் கூட தனிப்பட்ட உரிமை என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- ✓ உலக அளவில் சில நாடுகள் கருணைக் கொலை செய்ய முறையான சட்ட வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளது.
- ✓ இந்தியாவில் சட்டப்பூர்வமாக கருணைக் கொலைக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இந்திய அரசியலைப்புச் சட்டம் பிரிவு 21ல் வாழ்வதற்கான உரிமையை **Right to live with dginity** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மரியாதையோடு வாழ்வது என்கிற அடிப்படையில் பார்த்தால் தீராதநோய் மற்றும் வலி, வேதனையோடு வாழ்வது மரியாதையான வாழ்க்கையா? ஒருவர் வலியுடன் எதற்காக வாழ வேண்டும்? ஆகவே கருணைக் கொலையை மரியாதை இல்லாத வாழ்க்கை மற்றும் நல்மரணம் என்கிற அடிப்படையில் ஏற்றுக்கொள்ளலாம்.

## கவனத்தில் கொள்ளக்கூடியவை ?

- ✓ இந்தியாவைப் பொறுத்தவரை இதனை முறைகேடாக பயன்படுத்தும் வாய்ப்பு அதிகம்
- ✓ போதிய அளவில் இதற்கான சட்ட வழிமுறைகள் உருவாக்கப்படவில்லை
- ✓ மேலும் ஒரு நபர் தன்விருப்பத்துடன் தான் கருணைக்கொலை செய்ய விண்ணப்பம் செய்கிறார் என்பதை உறுதிப்படுத்த முறையான நடைமுறைகள் இல்லை.
- ✓ மருத்துவர்கள் , சமூக ஆர்வலர்கள் , அரசு பிரதிநிதிகள், நீதித்துறை இணைந்து பெரும் விவாதத்திற்கு பின் இதுபற்றிய தெளிவான சட்ட விதிமுறைகள் வகுக்கப்பட்டு முறையாக அமல்படுத்த வேண்டும்.

## உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்

- ✓ கருணைக் கொலை செய்ய விழைவோர் தன்விருப்பமாகவோ அல்லது அவருடைய பாதுகாப்பாளர் மூலமாகவோ அல்லது மருத்துவக்குழுவோ விண்ணப்பம் செய்யலாம்

- ✓ அவ்வாறு செய்யும் போது அந்த 20 ஆண்டுகள் மருத்துவத்தில் அனுபவம் உள்ள 3 நபர்கள் கொண்ட குழு பரிசோதித்து அறிக்கையினை மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்யும்
- ✓ மாவட்ட ஆட்சியர் தனியாக மூவர் கொண்ட மருத்துவக் குழுவை அமைத்து அறிக்கையை பரிசீலித்து அனுமதி வழங்குவதா வேண்டாமா என முடிவு செய்யும்
- ✓ மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்கவில்லையெனில் உயர்நீதிமன்றத்தை அனுகலாம்.

**கருணைக்கொலை பற்றிய முந்தைய விவாதங்கள்**

மும்பை மருத்துவமனையில் நர்ஸாக பணியாற்றியபோது, பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டு, கடந்த 42 ஆண்டுகளாக கோமா நிலையில் இருந்தபோது கருணைக்கொலை பற்றிய விவாதம் எழுந்தது

IYACHAMY ACADEMY

NO 172, GROUND FLOOR, (OPPOSITE TO ANNACHI KADAI),

THIRUGNANASAMBANDAR STREET,

TIRUVALLEESWARAR NAGAR, THIRUMANGALAM

ANNA NAGAR WEST, CHENNAI – 40

PH: 7418521550, 9952521550, 044-48601550

**Weekly GROUP I & II WRITING PRACTICE VIA WHATSAPP. REGISTER YOUR NAME WITH DISTRICT AND LANGUAGE CHOOSES FOR MAINS . WHATSAPP NUMBER 044-48601550**

வாரம் தோறும் குருப் 1 மற்றும் 2 முதன்மைத் தேர்வுக்கு எழுத்துப் பயிற்சிக்கு சேர விரும்புபவர்கள் தேர்வு செய்யும் மொழி மற்றும் மாவட்டத்தினையும் சேர்த்து **044-48601550** என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்.